# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 12965 / 2010 / எம்சி. 8 நாள் : 29.12 .2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 05.01.2011 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 2

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜனவரி 2011

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | கல்விப் பிரிவு - இராமகிருஷ்ணாபுரம் (கணபதி) ஆரம்பப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல் - அரசு ஆணை வெளியிடப்பட்டது – மாமன்றம் பதிவு செய்தல்- தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 31 – நஞ்சப்பா சாலை தென்புறத்தில் கிராஸ்கட் சாலை முதல் பட்டேல் சாலை வரை மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 31 – நஞ்சப்பா சாலை தென்புறத்தில் கிராஸ்கட் சாலை முதல் பட்டேல் சாலை வரை நடைபாதை அமைத்தல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 7 – நஞ்சப்பா நகர் பகுதிகளில் பாலம் கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 23 – மருதூர் மாரியம்மன் கோவில் வீதி, பெருமாள் கோவில் வீதி மற்றும் அன்பு வீதிகளில் மழைநீர் வடிகால் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 59 – பி.என்.புதுார் உயர்நிலைப்பள்ளியில் முதல் தளம் கட்டுதல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - 2 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 47 – தேவாங்க பேட்டை முதல் சுக்கிரிவார் பேட்டை வரை உள்ள சாலையில் நடைபாதை அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 43 – ஒக்கிலியர் காலனி பள்ளியின் பின்புறம் சமுதாயக் கூடம் கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 50- தடாகம் சாலை – கழிவுநீர் கால்வாய்க்கு மூடு பலகை அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 70 – கட்டபொம்மன் வீதி மற்றும் சத்தி சாலை சந்திப்பில் பாலம் கட்டுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 12 | பொறியியல் பிரிவு - 10 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | பொறியியல் பிரிவு - 60 எண்ணிக்கைகள் நடமாடும் கழிவறைகள் - அரசு துறைகள் மற்றும் தனியார்களுக்கு வாடகை விடுதல் - கட்டணம் நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 14 | பொறியியல் பிரிவு - தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 54- குழந்தை கவுண்டர் வீதியில் சிறுபாலம் கட்டுதல் பணி -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | நகரமைப்புப் பிரிவு -மேற்கு மண்டலம் - ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகம் - தமிழ்நாடு மின்சார வாரியம் - உயர் மின்அழுத்த கோபுரம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 58 – சீரநாய்க்கன்பாளையமத் பகுதி சமுதாயக் கூடம் - கட்டணம் நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 18 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - இராமநாதபுரம் -மாநகராட்சி வணிக வளாகம் - கடை எண் 10 – பெயர் மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 19 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - உப்பிலிபாளையம் - மாநகராட்சி வணிக வளாகம் - கடை எண் 5 – உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - இராமநாதபுரம் - மாநகராட்சி வணிக வளாகம் - கடை எண் 11 – உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 21 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - புலியகுளம் - மாநகராட்சி வணிக வளாகம் - கடை எண் 3 – பெயர் மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 22 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - உக்கடம் - புதிய மீன் மார்க்கெட் - 2 கடைகள் - தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - உக்கடம் - புதிய மீன் மார்க்கெட் - 66 கடைகள் - மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி கோரியது – உச்சகேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 24 | பொது சுகாதாரப் பிரிவு - லாரிகள் மூலம் செப்டிக் டேங்க் கழிவு நீர் அகற்றுதல் - கட்டணம் உயர்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 25 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - சீனிவாசபுரம் காய்கறி மார்க்கெட் - தினசரி வசூல் செய்வதை மாத வாடகையாக மாற்றியமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 26 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 30 – ஆம்னி பேருந்து நிலைய வணிக வளாக கட்டிடத்தில் உள்ள அறை - வாடகை நிர்ணயம் செய்து மின் ஏலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 27 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - டாடாபாத் ராஜு ரோடு வணிக வளாகம் - கடை எண் 1A – ஒப்பந்தப் புள்ளி கோரியது –ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 28 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - ராதாகிருஷ்ணா ரோடு வணிக வளாகம் - சிற்றுண்டி அறை - ஒப்பந்தப் புள்ளி கோரியது – ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 29 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வணிக வளாகம் கடைகள் - உரிமம் புதுப்பித்து வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 30 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை தனியாருக்கு விற்பனை செய்தல் - கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது – மாற்றி அமைத்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| 31 | கணக்குகள் பிரிவு - வரிவசூல் மையங்களில் சொத்து வரி, குடிநீர் வரி மற்றும் ஏனைய வரிகள் வசூல் செய்தல் - தனியார் வங்கிகளோடு ஒப்பந்தல் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 32 | பொது சுகாதாரப் பிரிவு - நவீன இயந்திரம் பொருத்தப்பட்ட லாரிகள் மூலம் செப்டிக் டேங்க் சுத்தம் செய்தல் - கட்டணம் நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 33 | பொது சுகாதாரப் பிரிவு - திருமண மண்டபங்கள் மற்றும் பொது நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள் - குப்பை கழிவுகள் அகற்றுதல் - கட்டணம் உயர்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 34 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் - நகரளவு எண் 1243,1 – 6293 சதுரடி நிலம் - Central Board for worker Education நிறுவனத்திற்கு நில மாற்றம் செய்யப்பட்டது – தீர்மானம் ரத்து செய்தல் - மாமன்றம் அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 35 | பொறியியல் பிரிவு - 5 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 36 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 35 – முத்து மாரியம்மன் கோயில் வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 37 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 13 – பாரதி நகர் 1 முதல் 6 வீதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 38 | பொறியியல் பிரிவு - வார்டு 25 – அரசு கல்லூரி சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதை அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 39 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 69 – விஸ்வநாதபுரம் பிளாக் A பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 40 | கிழக்கு மண்டலம் - வார்டு எண் 22- ராமசாமி நகர் பொது ஒதுக்கீட்டு இடத்தில் நூலகம் கட்டுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 41 | பொது சுகாதாரப் பிரிவு - சொக்கம்புதூர் மற்றும் ஆத்துப்பாலத்தில் உள்ள மின்மயானங்கள் - பராமரித்தல் - ஒப்பந்தப்புள்ளி கோரியது – தி.வா காந்திஜி சேவா டிரஸ்ட், கோவை நிறுவனத்திற்கு ஒப்படைப் செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 42 | தெற்கு மண்டலம் - பொது சுகாதாரம் - நஞ்சுண்டாபுரம் எரிவாயு மயானம் - பராமரித்தல் மற்றும் மேலாண்மை செய்தல் - ஈஷா பவுண்டேஷன் நிறுவனத்திற்கு அனுமதி அளித்தல் - நகராட்சி நிர்வாக இயக்குநரின் உத்திரவு பெறுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 43 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - ராஜ வீதி முதல் பெரிய கடை வீதி வரை உள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடம் - குத்தகை இனத்தில் சேர்த்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 44 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - புதிய மீன் மார்க்கெட் வளாக கடைகள் - ரூ 4000 க்கும் மேல் ஏலத்தொகை கோரியுள்ள கடைகள்- ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 45 | கணக்குகள் பிரிவு - இணைய தள வசதிகள் மூலம் வரியினங்கள் செலுத்துதல் மற்றும் மின் ஆளுமை சேவை பயன்பாடு மேம்படுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 46 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையம் - உரிம இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 47 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - ரங்கே கவுண்டர் வீதி புதிய மலர் அங்காடி வணிக வளாகம் - உரிம இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 48 | பொது சுகாதாரப் பிரிவு - குப்பைகள் அகற்றுதல் பணிக்கு தனியார் லாரிகளை ஈடுபடுத்துதல் - புதிய ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 49 | பொது சுகாதாரப் பிரிவு - குப்பைகள் அகற்றுதல் பணிக்கு தனியார் டிராக்டர்களை ஈடுபடுத்துதல் - புதிய ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |

நன்றியுரை

## பொருள் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சி இராமகிருஷ்ணாபுரம் (கணபதி) ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தகுதி உயர்த்தி, பள்ளி கல்வித் துறை (சி2) அரசாணை (நிலை) எண். 196 நாள் 19.07.2010-ல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காண் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தகுதி உயர்த்தி உத்திரவிடப்பட்ட அரசாணை கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் நிலைக்குழுவின் தீர்மானம் எண் 1 நாள் 6.12.2010ன்படி பதிவு செய்து மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம். ந.க.எண். 7087/2010/கே14

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 166 நாள் 05.01.2011</u>**

அரசு ஆணை (நிலை) எண்.196 பள்ளிக் கல்வித்(சி2) துறை நாள் 19.07.2010 பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11528/10/ எம்.டி.2 | வார்டு எண்.31-ல் உள்ள கிராஸ்கட் சாலை தென் புறத்தில் நஞ்சப்பா சாலை முதல் பட்டேல் சாலை வரை மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் | 65.65 | 07-12-2010 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இஞ்ஜினியர்ஸ் | 9.82 அதிகம் | 4.92 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 11528/2010/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 167 நாள் 05.01.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 10-12-2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்ட பணியை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 11529 /2010/ எம்.டி.2 | வார்டு எண் 31-ல் கிராஸ்கட் சாலை தென்புறத்தில் நஞ்சப்பா சாலை முதல் பட்டேல் சாலை வரை நடைபாதை அமைத்தல். | 59.72 | 07-12-10 முதல் அழைப்பு | திரு. ஆர் செல்வராஜ் | 4.55% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமா்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:11529 /2010/எம்.டி.2

**மாநகர மன்ற தீா்மானம் எண் 168 நாள் 05.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 10.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயா் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6162/10/ எம்.டி.3 | வாா்டு எண்.7 நஞ்சப்பா நகா் பகுதிகளில் பாலம் அமைத்தல் | 20.00 | 24-11-2010 முதல் அழைப்பு | தி/ ள் என்.பி.கே. அசோசியட்ஸ் | 4.91 அதிகம் | 4.77 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 6162 /2010/எம்.டி.3

**மாநகர மன்ற தீா்மானம் எண் 169 நாள் 05.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயா் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை- வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11177/10/ எம்.டி.3 | வாா்டு எண்.23 மருதூா் மாரியம்மன் கோவில் வீதி, பெருமாள் கோவில் வீதி மற்றும் அன்பு வீதிகளில் மழைநீா் வடிகால் அமைத்தல் | 19.83 | 19-11-2010 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இஞ்ஜினியா்ஸ் | 4.51 அதிகம் | 4.47 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 11177/2010/எம்.டி.3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 170 நாள் 05.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் 59 பி.என்.புதூர் உயர்நிலைப்பள்ளியில் முதல் தளம் கட்டுதல் பணிக்கு 16.11.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு எஸ். ராஜு - 4.94% அதிகம்
2. திரு பி. இளங்கோ - 16.12% அதிகம்.

மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை 18.11.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழுவில் பரிசீலிக்கப்பட்டதில், திரு எஸ். ராஜு, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் எனவும் இவரிடம் மேலும் விலையினை குறைத்துக்கொடுக்க கேட்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி திரு எஸ். ராஜு, ஒப்பந்ததாரர் அவர்களிடம் மேலும் விலையினை குறைத்துக்கொடுக்க கடிதம் அனுப்பப்பட்டதில் இந்த ஒப்பந்ததாரர் முன்பு கொடுத்திருந்த மதிப்பீட்டிற்கு 4.94% அதிகத்திலிருந்து மேலும் விலையினைக் குறைத்து 4.61% அதிகம் கொடுத்தள்ளார். இதனை 29.11.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழுவில் பரிசீலனை செய்யப்பட்டதில் இந்தப் பணி குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டால் இதைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி பெறும் வாய்ப்பு உறுதியற்றதாக இருக்கின்ற காரணத்தினாலும் மதிப்பீட்டிற்கு 4.61% அதிகம் விலையினைக் குறைத்துக் கொடுத்துள்ள திரு எஸ். ராஜு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம் என இக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே மதிப்பீட்டிற்கு 4.61% அதிகம் விலையினைக் குறைத்துக் கொடுத்துள்ள திரு எஸ். ராஜு என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம். பொறியியல் பணிவிதிகளின்படி மதிப்பீட்டிற்கு 5% அதிகம் வரை பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் ஒப்புதல் வரம்பிற்குள் வருவதாலும் இந்தப்பணி குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டால் இதைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி பெறும் வாய்ப்பு உறுதியற்றதாக இருக்கின்ற காரணத்தினாலும் இப்பணிக்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண். 4877/2010/எம்.டி. 5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 171 நாள் 05.01.2011</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 10.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9393/10/ எம்.டி.2 | வார்டு எண் 71 ஜெயப்பரகாஷ் நகரில் பாலம் கட்டுதல் | 14.84 | 26-11-2010 முதல் அழைப்பு | தி/ ள் என்.பி.கே. அசோசியட்ஸ் | 4.94 அதிகம் | 4.83 அதிகம் |
| 2 | 9679/10/ எம்.டி.2 | வார்டு எண் 71 பெரியார் நகருக்கு சிறு பாலம் கட்டுதல் | 14.84 | 26-11-2010 முதல் அழைப்பு | தி/ ள் என்.பி.கே. அசோசியட்ஸ் | 4.97 அதிகம் | 4.87 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1 மற்றும் 2-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் 5% வரை கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 9393 /2010/எம்.டி.2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 172 நாள் 05.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11053/10/ எம்.டி.4 | வார்டு எண்.47 ரங்கே கவுண்டர் வீதியில் தேவாங்கபேட்டை முதல் சுக்கிரவார்பேட்டை வரை உள்ள சாலையில் நடைபாதை அமைத்தல் | 28.20 | 10-12-2010 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இஞ்ஜினியர்ஸ் | 5.00 அதிகம் | 4.92 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 11053/2010/எம்.டி.4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 173 நாள் 05.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

**கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.**

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10019/10/ எம்.டி.4 | (SJSRY Scheme) வார்டு எண்.43 ஒக்கிலியர் காலனி பள்ளியின் பின்புறம் சமுதாயக் கூடம் கட்டுதல் | 20.00 | 15-12-2010 இரண்டாம் அழைப்பு | திருமதி.கே. பங்கஜம் | 4.74% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.**

ந.க.எண்: 10019/10/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 174 நாள் 05.01.2011</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் 10**

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8546/10/ எம்.டி.1 | வார்டு எண்.50 தடாகம் சாலையில் உள்ள கழிவுநீர் கால்வாய்க்கு மூடுபலகை அமைத்தல். | 26.60 | 10.12.10 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இஞ்ஜினியர்ஸ் | 5.07 அதிகம் | 4.92 அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: வரிசை எண் 1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 8546/10/எம்.டி.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 175 நாள் 05.01.2011</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் : 70 கட்டபொம்மன் வீதி மற்றும் சத்தி சாலை சந்திப்பில் ரூ.9.98 லட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணிக்கு 11-11-2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.

1. தி/ள் என்.பி.கே.அசோசியேட்ஸ் - 8.93% அதிகம்.

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை 12-11-2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவில் பரிசீலிக்கப்பட்டதில், இந்த ஒப்பந்தாரரிடம் மேலும் விலையினை குறைத்துக் கொடுக்க கேட்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி இந்த ஒப்பந்ததாரரிடம் மேலும் விலையினை குறைத்து கொடுக்க கடிதம் அனுப்பப்பட்டதில் இந்த ஒப்பந்ததாரர் முன்பு கொடுத்திருந்த மதிப்பீட்டிற்கு 8.93% அதிகத்திலிருந்து மேலும் விலையினைக் குறைத்து 4.97% அதிகம் கொடுத்துள்ளார். இதனை 29-11-2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவில் பரிசீலனை செய்யப்பட்டதில் இந்த பணி குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டால் இதை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி பெறும் வாய்ப்பு உறுதியற்றதாக இருக்கின்ற காரணத்தினாலும் மதிப்பீட்டிற்கு 4.97% அதிகம் விலையினைக் குறைத்துக் கொடுத்துள்ள தி/ள் என்.பி.கே.அசோசியேட்ஸ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம் என இக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே மதிப்பீட்டிற்கு 4.97% அதிகம் விலையினைக் குறைத்துக் கொடுத்துள்ள தி/ள் என்.பி.கே.அசோசியேட்ஸ் எனும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம். பொறியியல் பணி விதிகளின்படி மதிப்பீட்டிற்கு 5% அதிகம் வரை பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் ஒப்பதல் வரம்பிற்குள் வருவதாலும் இந்தக் பணி குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டால் இதை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி பெறும் வாய்ப்பு உறுதியற்றதாக இருக்கின்ற காரணத்தினாலும் இப்பணிக்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்:11412/2010/எம்.டி2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 176 நாள் 05.01.2011</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

கோவை மாநகராட்சி பகுதியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர அபிவிருத்தி திட்டத்தின்படி கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 21.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2217/09/ எம்.டி.5 | வார்டு எண்-6-ல் உள்ள திருவள்ளுவர் நகர் மேற்கு பகுதியில் தார்தளம் அமைத்தல் | 42.00 | 16-11-2010 ஒன்பதாவது அழைப்பு | தி/ள். எஸ்பி. பில்டர்ஸ் | 5.08 அதிகம் | 4.99 அதிகம் |
| 2 | 2218/09/ எம்.டி.5 | வார்டு எண்-6-ல் உள்ள திருவள்ளுவர் நகர் கிழக்கு பகுதியில் தார் தளம் அமைத்தல் | 45.00 | 16-11-2010 ஒன்பதாவது அழைப்பு | தி/ள். எஸ்பி. பில்டர்ஸ் | 5.06 அதிகம் | 4.96 அதிகம் |
| 3 | 2219/09/ எம்.டி.5 | வார்டு எண்-6-ல் உள்ள எம்.ஜி.ஆர். நகர் (திருவள்ளுவர் நகர்) கிழக்கு பகுதியில் தார் தளம் அமைத்தல் | 46.50 | 16-11-2010 ஒன்பதாவது அழைப்பு | தி/ள். எஸ்பி. பில்டர்ஸ் | 5.08 அதிகம் | 4.91 அதிகம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2220/09/ எம்.டி.5 | வார்டு எண்-6-ல் உள்ள எம்.ஜி.ஆர். நகர் (திருவள்ளுவர் நகர்) மேற்கு பகுதியில் தார்தளம் அமைத்தல் | 43.50 | 16-11-2010 ஒன்பதாவது அழைப்பு | தி/ள். எஸ்பி. பில்டர்ஸ் | 5.07 அதிகம் | 4.99 அதிகம் |
| 5 | 2067/09/ எம்.டி.5 | வார்டு எண்-15-ல் உள்ள இந்திரா நகர் பகுதியில் தார் தளம் அமைத்தல் | 28.80 | 16-11-2010 ஒன்பதாவது அழைப்பு | தி/ள். எஸ்பி. பில்டர்ஸ் | 4.84 அதிகம் | 4.79 அதிகம் |
| 6 | 957/09/ எம்.டி.5 | வார்டு எண்.59 லிங்கனூர் பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் அமைத்தல் | 13.43 | 07-12-2010 ஒன்பதாவது அழைப்பு | திரு. பி. இளங்கோ | 6.27 அதிகம் | 4.93 அதிகம் |
| 7 | 878/09/ எம்.டி.5 | வார்டு எண்-11-ல் உள்ள கக்கன் நகர் பகுதியில் தார் சாலை புதுப்பித்தல் | 17.00 | 19-11-2010 ஒன்பதாவது அழைப்பு | தி/ள். எஸ்பி. பில்டர்ஸ் | 5.37 அதிகம் | 4.95 அதிகம் |
| 8 | 1027/09/ எம்.டி.5 | வார்டு எண்-5-ல் உள்ள ஆஞ்சனேயர் காலனி பகுதியில் தார் சாலை புதுப்பித்தல் | 13.15 | 19-11-2010 ஒன்பதாவது அழைப்பு | தி/ள். எஸ்பி. பில்டர்ஸ் | 5.70 அதிகம் | 4.99 அதிகம் |
| 9 | 989/09/ எம்.டி.5 | வார்டு எண் 57ல் பி.என்.புதூர் பகுதி இந்திரா நகருக்கு மறுதார்தளம் அமைத்தல் | 18.75 | 19-11-2010 ஒன்பதாவது அழைப்பு | தி/ள். எஸ்பி. பில்டர்ஸ் | 5.64 அதிகம் | 4.99 அதிகம் |
| 10 | 1003/09/ எம்.டி.5 | வார்டு எண்.66ல் உள்ள கணபதி, காமராஜபுரத்தில் தார்சாலை புதுப்பித்தல் | 17.60 | 19-11-2010 ஒன்பதாவது அழைப்பு | தி/ள். எஸ்பி. பில்டர்ஸ் | 5.75 அதிகம் | 4.96 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

1. வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள பணிகளின் நிர்வாக அனுமதியை அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

2. வரிசை எண். 5 மற்றும் 6-ல் குறிப்பிட்டுள்ள பணிகளின் நிர்வாக அனுமதியை அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர பணிக்குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

3. வரிசை எண்.1 முதல் 10 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2217/2009/எம்.டி.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 177 நாள் 05.01.2011</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2, 3 அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு பணிக்கு வாங்கப்பட்ட 60 எண்ணிக்கைகள் நடமாடும் கழிவறைகள் வாங்கியது – மாநாடு முடிவு பெற்றது – வாங்கப்பட்ட கழிவறைகளை அரசு துறைகள் மற்றும் தனியார்களுக்கு வாடகைக்கு விடுவது – கட்டணம் நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி – தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 95 நாள் 15.12.2010

-------------

கடந்த ஜுன் மாதம் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கென 60 எண்ணிக்கைகள் கொண்ட கீழ்கண்ட அமைப்புகளுடன் கூடிய நடமாடும் கழிவறைகள் (Portable Toilet) வாங்கப்பட்டது.

| விபரம் | வகை – 1 | | வகை – 2 | | வகை – 3 | | வகை – 4 | | வகை - 5 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | பெண்கள் |
| | (எண்ணிக்கையில்) | | | | | | | | |
| வாட்டர் கிளாசட்கள் | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 1 | 1 | 4 |
| வாஷ் பேசன்கள் | 4 | 3 | 4 | 2 | 4 | 2 | 3 | 1 | 4 |
| யூரினல்கள் | 3 | இல்லை | 4 | இல்லை | 4 | இல்லை | 8 | இல்லை | இல்லை |

மேற்படி வாங்கப்பட்ட கழிவறைகளை முக்கிய இடங்களில் நிறுவி அவற்றினை தனியார் வசம் ஒப்படைவு செய்து விளம்பரம் உரிமம் அளித்து இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் மேற்கொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உபயோகிக்க மாமன்ற தீர்மான எண்.75 நாள் 30-07-2010-ல் முடிவு செய்யப்பட்டது. தற்சமயம் பல்வேறு அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மேற்படி கழிப்பறைகளை வாடகை அடிப்படையில் இம்மாநகராட்சியினை கேட்டவண்ணம் உள்ளனர். வாங்கப்பட்ட மொத்தம் 60 கழிப்பறைகளில் 20 எண்ணிக்கைகளை அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடுவதால் இம்மாநகராட்சிக்கு மேற்படி கழிவறைகளை பராமரிப்பதற்கு தேவையான கணிசமான வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மேற்படி 20 எண்ணிக்கைகளிலான நடமாடும் கழிவறைகளை கீழ்கண்ட பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள வாடகை கட்டணங்களை நிர்ணயம் செய்து விருப்பப்படும் அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விட வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில், தீர்மானம் எண் 95 நாள் 15.12.2010ன்படி, கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வகை | கிரேன் மூலம் தூக்குதல் மற்றும் வைப்பதற் கான கட்டணம் (இரண்டு நடைகளு க்கு) | லாரி போக்கு வரத்து கட்டணம் (இரண்டு நடை களுக்கு) 10 கி.மீ. வரையில் | பிளம்பிங் கட்டணம் (சாமான் மற்றும் கூலி உட்பட) | | மேற் பார்வை கட்டணம் (நாள் ஒன்றிற்கு) | கழிப்ப றை களை சுத்தம் செய்யும் கட்டணம் | வாடகை கட்டணம் (நாள் ஒன்றிற்கு) | பராமரிப்பு கட்டணம் | வைப்புத் தொகை | மொத்த கட்டணம் (நாள் ஒன்றிற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சாமான் கள் | கூலி | | | | | | |
| வகை 1 | 9600 | 9000 | 3200 | 2000 | 2000 | 750 | 1000 | 2000 | 5000 | 34550 |
| வகை 2 | 9600 | 9000 | 3200 | 2000 | 2000 | 750 | 1000 | 2000 | 5000 | 34550 |
| வகை 3 | 9600 | 9000 | 3200 | 2000 | 2000 | 750 | 1000 | 2000 | 5000 | 34550 |
| வகை 4 | 9600 | 9000 | 3200 | 2000 | 2000 | 750 | 1000 | 2000 | 5000 | 34550 |
| வகை 5 | 6000 | 4500 | 2000 | 1000 | 2000 | 500 | 500 | 2000 | 5000 | 23500 |

மேலே குறிப்பிட்டுள்ள போக்குவரத்து கட்டணம் ஒரு கழிவறையினை 10 கி.மீ தூரம் உள்ளடங்கிய இடங்களுக்கு நிர்ணயிக்கலாம். 10 கி.மீட்டருக்கு மேல் ஆகும் ஒவ்வொரு கூடுதல் கூடுதல் கி.மீட்டர் தூரத்திற்கு ரூ.30.00 வீதம் கணக்கிட்டு தொகை நிர்ணயம் செய்யலாம்.

எனவே, உத்தேசிக்கப்பட்ட 20 எண்ணிக்கைகளிலான பல்வகைப்பட்ட நடமாடும் கழிப்பிடங்களை மேற்கண்ட பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள வாடகை கட்டணங்களை நிர்ணயம் செய்து அவற்றினை தேவைப்படும் அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விட மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.7512/ 2010/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 178 நாள் 05.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகளில் பகிமான குழாய் பதித்தும் குடிநீர் அழுத்தம் குறைவாக உள்ள பகுதிகள், குடிசைப் பகுதிகள், குடிநீர் பற்றாக்குறையாக உள்ள பகுதிகள், குடிநீர் விநியோகம் சீராக இல்லாத பகுதிகள் மற்றும் குழாய் பதிக்கப்படவுள்ள பகுதிகளுக்கு தனியார் டேங்கர் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி வரும் பணிக்கான ஒப்பந்தக்காலம் வரும் 27.04.2011ம் தேதியுடன் முடிவு பெறவுள்ளது. தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ள பகுதிகளுக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோருவது அவசியமாகிறது.

லாரி மூலம் குடிநீர் விநியோகத்தினை தனியார் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் கடித எண் 58031/08/தி1 நாள் 16.11.2009-ல் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தில் உள்ள நடைமுறையான தனியார் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யும் முறையினை பின்பற்றி கோவை மாநகராட்சி பகுதிகளிலும் தனியார் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகத்தினை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஒரு ஆண்டு காலத்திற்கு தனியார் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகத்தினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 75 லட்சத்திற்கு மேற்கொள்ளவும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம், நிர்வாக அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்:13922/2010/(எம்.டி4) எம்.டி.2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 179 நாள் 05.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட அபிவிருத்திப் பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 29.11.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்ட பணிகளையேற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10892/09/ எம்.டி.4 | வார்டு எண்.54 குழந்தை கவுண்டர் வீதியில் சிறுபாலம் அமைத்தல் | 9,70,000 | 11.11.2010 முதல் அழைப்பு | தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 4.51% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-மேற்கண்ட பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 10982 /09/எம்.டி.4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 180 நாள் 05.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், ஆர்.எஸ். புரம், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகம் - தமிழ்நாடு மின்சார வாரியம் உயர் மின் அழுத்த கோபுரம் அமைக்க 10மீ x 10மீ அளவிலான இடம் ஒதுக்கீடு செய்ய கோரியது –தொடர்பாக.

--------

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.51, நகரளவு வார்டு எண். 652 Pt, T.S.பிளாக் எண்.18, T.S. வார்டு எண்.8 வாழைக்காய் மண்டி அருகில் உள்ள ஆர்.எஸ். புரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தரைக்குக் கீழ் உள்ள 110 கிலோ வாட் உயர் அழுத்த மின் கம்பிகளை அகற்றி அதற்கு பதிலாக மேல்நிலை உயர் மின் அழுத்த கம்பிகள் அமைக்கும் பொருட்டு, தென் மேற்கு மூலையில் ஏற்கனவே உள்ள உயர் மின் அழுத்த கோபுரத்திற்கு எதிராக தென்கிழக்கு மூலையில் துணை மின் நிலையத்தின் அருகே உயர் மின் அழுத்த கோபுரம் அமைக்க 10மீx 10மீ அளவிலான இடத்தினை ஒதுக்கீடு செய்யுமாறு கண்காணிப்புப் பொறியாளர், கோயம்புத்தூர் மாவட்ட மின் பகிர்மான வட்டம் / மெட்ரோ அவர்கள் கோரியுள்ளார்.

எனவே கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் கோரியபடி ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தென் கிழக்கு மூலையில் உயர் மின் அழுத்த கோபுரம் அமைக்க 10 மீ x 10 மீ அளவிலான இடத்தினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி கோரி மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண். 10462/04/எச்-1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 181 நாள் 05.01.2011**

அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம்- வார்டு எண். 58 - சீரநாய்க்கன்பாளையம் பொன்னுசாமி நகர் பகுதியில் சமுதாய க்கூடம் கட்டப்பட்டுள்ளது - பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்த அனுமதி வேண்டுவது - தொடர்பாக.

பார்வை - உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் 10.12.2010ம் தேதிய குறிப்பு

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.58, சீரநாய்க்கன்பாளையம் பொன்னுச்சாமி நகர் பகுதியில் சமுதாய கூட கட்டிடம் ரூ.6.20 லட்சத்தில் பராமரிப்பு பணி செய்யப்பட்டுள்ளது. கட்டிடத்தின் பரப்பு 128.00 ச.மீ மற்றும் கழிவறைகள் குடிநீர் வசதி, வாகன நிறுத்துமிடம் ஆகிய வசதிகளுடன் முடிக்கப்பட்டு, தற்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் பொருட்டு கட்டிடத்திற்கு தற்போதைய வழிகாட்டி மதிப்பின்படி தினவாடகை ரூ.770/- என உதவி பொறியாளர் அவர்களால் பார்வையில் காண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி சமுதாய கூடத்திற்கு தினசரி வாடகை ரூ.800/- ஆக நிர்ணயம் செய்யவும், சமுதாய கூடத்தை உபயோகப்படுத்துபவர்களிடம் முன்வைப்புத் தொகையாக (deposit) ரூ.2500/- பெற்று பின்னர் திரும்ப வழங்கவும் (Refund) ரூ.100/-ஐ சர்வீஸ் சார்ஜ் ஆக வசூல் செய்யவும், ஏற்கனவே உள்ள விதிமுறைகளின்படி சமுதாய கூடத்தை பயன்பாட்டிற்கு அளிக்க வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 104 நாள். 22.12.10 ன்படி அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, மேற்படி பொருள் தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 9667 /10/D1 (W)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 182 நாள் 05.01.2011**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 104 நாள் 22.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

பொருள் : கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் ( வரிவிதிப்பு எண்.10010) கடை எண். 10-ன் உரிமையாளர் திரு. கருப்பண்ணத் தேவர் என்பவர் 29.04.2003 அன்று காலமாகி விட்டதால் அன்னாரது வாரிசுதாரர்களின் ஒருவராகிய திரு கே. மாரிமுத்து என்பவருக்கு மேற்படி கடையை பெயர் மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதி கோருவது குறித்து

------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் ( வரிவிதிப்பு எண். 10010) கடை எண். 10-ன் உரிமையாளர் திரு கருப்பண்ண தேவர் என்பவர் 29.04.2003 அன்று காலமாகி விட்டதால் அன்னாரது வாரிசுதாரர்களின் ஒருவராகிய திரு கே. மாரிமுத்து என்பவருக்கு மேற்படி கடையை பெயர் மாற்றம் செய்ய கோரிய விண்ணப்பத்தில் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது. மற்றும் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து எழுதிக் கொடுக்கப்பட்ட உறுதிமொழி பத்திரம் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளின் குத்தகையை புதுப்பித்தல் குறித்து திருத்திய நடைமுறை அரசாணை எண். 92 நாள் 03.07.2007-ன்படி சட்டப்படியான வாரிசுதாரர்கள் பொதுவான குத்தகை நிபந்தனைகள் மற்றும் குத்தகை நிர்ணயித்திற்குட்பட்டு பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ. 500/- செலுத்தப்பட்டது. மேலும் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர் 06.09.2010 வரை கடை வாடகை ரூ.4,415/- நிலுவையின்றி செலுத்தப்பட்டது.

எனவே, இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.10-ன் உரிமைதாரர் பெயர் திரு கருப்பண்ண தேவர் என்பதிலிருந்து திரு கே. மாரிமுத்து என்பவர் பெயருக்கு மாற்றம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.92 நாள் 15.12.2010 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.1425/ 2010/ கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 183 நாள் 05.01.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 92 நாள் 15.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

பொருள் : வணிக வளாக கடைகள் - கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 5-ன் உரிம காலம் 31.03.2010-உடன் முடிவடைந்தது. உரிமக் கட்டணம் உயர்வு செய்து உரிமக் காலம் நீட்டிப்பு செய்வது - சம்பந்தமாக

------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 5-ன் உரிமதாரர் திரு ஆர்.அய்யாசாமி என்பவருக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.1,560/- என்ற அடிப்படையில் 01.04.2007 முதல் 31.03.2010 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு மாமன்ற தீர்மான எண். 301 நாள் 30.07.2007 மூலம் நீட்டிப்பு செய்யப்பட்ட உரிமக் காலம் 31.03.2010 உடன் முடிவடைந்தது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல், குத்தகை புதுப்பித்தல் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (நிலை) எண். 92 நாள் 03.07.2007-ல் திருத்திய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அப்பகுதியில் அமைந்துள்ள தனியார் கடைகளுக்கு சதுரடிக்கு அதிகபட்சமாக 9.37 வீதம் வசூலிக்கப்பட்டு வருவதாக வெளியிடப் பணியாளர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்.5-ன் உரிமதாரர் திரு ஆர்.அய்யாசாமி உரிம நீட்டிப்பு தொகை அரசாணையின்படி செலுத்தியுள்ளார். (இரசீது எண்.201003172779 நாள் 17.03.2010)

அரசாணையின்படி மேற்படி உரிம காலம் முடிவடைந்து உரிமக் காலம் நீட்டிப்பு செய்யப்பட வேண்டிய மேற்படி கடைக்கு தற்போதைய சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டால், மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.1,560/- எனவும் தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் மாதாந்திர உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சமாக 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டால், மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.1,794 /- எனவும் வருகிறது.

எனவே, அரசாணையின்படி, உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்.5-ன் மாதாந்திர உரிமக் கட்டணம் சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுவதை விட தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணத்தில் 15 சதவீதம் உய்வு செய்யப்படும் தொகை கூடுதலாக வருவதனால், மேற்படி கடைக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.1,794/- என நிர்ணயம் செய்து 01.04.2010 முதல் 31.03.2013 முடிய மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.90 நாள் 15.12.2010 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.4336/ 2010/ கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 184 நாள் 05.01.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 90 நாள் 15.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

பொருள் : வணிக வளாக கடைகள் - கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 11ன் உரிம காலம் 30.11.2010-உடன் முடிவடைய உள்ளது. உரிமக் கட்டணம் உயர்வு செய்து உரிமக் காலம் நீட்டிப்பு செய்வது - சம்பந்தமாக

------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 11-ன் உரிமதாரர் திரு பி.எம்.அப்துல் காதர் என்பவருக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.7,850/- என்ற அடிப்படையில் 01.12.2007 முதல் 30.11.2010 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு மாமன்ற தீர்மான எண். 200 நாள் 29.08.2008 மூலம் நீட்டிப்பு செய்யப்பட்ட உரிமக் காலம் 30.11.2010 உடன் முடிவடைய உள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல், குத்தகை புதுப்பித்தல் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (நிலை) எண். 92 நாள் 03.07.2007-ல் திருத்திய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அப்பகுதியில் அமைந்துள்ள தனியார் கடைகளுக்கு சதுரடிக்கு அதிகபட்சமாக 12.50 வீதம் வசூலிக்கப்பட்டு வருவதாக வெளியிடப் பணியாளர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்.11-ன் உரிமதாரர் திரு பி.எம்.அப்துல் காதர் உரிம நீட்டிப்பு தொகை அரசாணையின்படி செலுத்தியுள்ளார். (இரசீது எண்.10292 நாள் 25.11.2010

அரசாணையின்படி மேற்படி உரிமக் காலம் முடிவடைந்து உரிமக் காலம் நீட்டிப்பு செய்யப்பட வேண்டிய மேற்படி கடைக்கு தற்போதைய சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டதால், மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.7,850/- எனவும் தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் மாதாந்திர உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சமாக 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டால், மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ. 9,028 /- எனவும் வருகிறது.

எனவே, அரசாணையின்படி, இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்.11-ன் மாதாந்திர உரிமக் கட்டணம் சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுவதை விட தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணத்தில் 15 சதவீதம் உய்வு செய்யப்படும் தொகை கூடுதலாக வருவதனால், மேற்படி கடைக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.9,028/- என நிர்ணயம் செய்து 01.12.2010 முதல் 30.11.2013 முடிய மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.91 நாள் 15.12.2010 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.11427/ 2010/ கிஅ11

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 185 நாள் 05.01.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 91 நாள் 15.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

பொருள் : கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட புலியகுளம் வணிக வளாகம் ( வரிவிதிப்பு எண்.10034) கடை எண். 3-ன் உரிமையாளர் திரு எம். குமாரசாமி என்பவர் 11.01.2010 அன்று காலமாகி விட்டதால் அன்னாரது மனைவி திருமதி கே. மாலதி என்பவருக்கு மேற்படி கடையை பெயர் மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதி கோருவது குறித்து

------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட புலியகுளம் வணிக வளாகம் ( வரிவிதிப்பு எண். 10034) கடை எண். 3-ன் உரிமையாளர் திரு எம். குமாரசாமி என்பவர் 11.01.2010 அன்று காலமாகி விட்டதால் அன்னாரது மனைவி திருமதி கே. மாலதி என்பவருக்கு மேற்படி கடையை பெயர் மாற்றம் செய்ய கோரிய விண்ணப்பத்தில் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளின் குத்தகையை புதுப்பித்தல் குறித்து திருத்திய நடைமுறை அரசாணை எண். 92 நாள் 03.07.2007-ன்படி சட்டப்படியான வாரிசுதாரர்கள் பொதுவான குத்தகை நிபந்தனைகள் மற்றும் குத்தகை நிர்ணயித்திற்குட்பட்டு பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ. 500/- செலுத்தப்பட்டது. மேலும் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர் 08.09.2010 வரை கடை வாடகை ரூ.2,183/- நிலுவையின்றி செலுத்தப்பட்டது.

எனவே, புலியகுளம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 3-ன் உரிமைதாரர் பெயர் திரு எம். குமாரசாமி என்பதிலிருந்து கே. மாலதி என்பவர் பெயருக்கு மாற்றம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.93 நாள் 15.12.2010 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.2080/ 2010/ கிஅ11

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 186 நாள் 05.01.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 93 நாள் 15.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பைபாஸ் ரோட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மீன்மார்க்கெட்டில் மொத்தம் 68 கடைகள் உள்ளன. இதில் இரண்டு கடைகளை ஒதுக்கீடு செய்து தருமாறு தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தினர் கோரியிருந்தனர்.

இதன் அடிப்படையில் மேற்படி தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தினருக்கென கடை எண் 60 மற்றும் 61 ஆகிய இரண்டு கடைகள் தவிர இதர 66 கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது. இக்கடைகள் ஒவ்வொன்றும் 10’ x 10’ = 100’ சதுர அடி அளவு கொண்டதாகும். மேற்படி மீன் மார்க்கெட் வளாகத்தில் ஒவ்வொரு கடைக்கும் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பு மாத வாடகை ரூ 3000 /-ஆகும்.

எனவே மேற்படி தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்திற்கு மேற்படி அரசு மதிப்பு மாத வாடகை அடிப்படையில் கடை எண்கள் 61 மற்றும் 62ஐ ஒதுக்கீடு செய்ய அவசர அவசியத்தை கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண் 4006 2010 அ1 தெ

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 187 நாள் 05.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண் 102 நாள் 22.12.2010.

- ------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பைபாஸ் ரோட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 66 மீன், கருவாடு மற்றும் ஆட்டிறைச்சி கடைகளுக்கான மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 09.12.2010ம் தேதியன்று நடைபெற்றது. இதில் கீழ் குறிப்பிட்டப்பட்டுள்ள கடைகளுக்கு மாதாந்திர வாடகையாக அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏல கோரிக்கை கோரப்பட்டுள்ளது.

<u>மீன் கடைகள்</u>

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | இனம் | கடை எண் | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | எ.மனோகரன் | மீன் கடை | 3 | ஒப்பந்தப்புள்ளி | 3,000/- |
| 02 | எம்.ஹபீப் ரஹ்மான் | மீன் கடை | 4 | ஒப்பந்தப்புள்ளி | 4,550/- |
| 03 | எ.ராமசாமி | மீன் கடை | 7 | ஒப்பந்தப்புள்ளி | 3,875/- |
| 04 | வி.எம்.உபைதுல்லா | மீன் கடை | 31 | மின் ஏலம் | 6,300/- |
| 05 | பி.முருகேசன் | மீன் கடை | 34 | ஒப்பந்தப்புள்ளி | 4,500/- |
| 06 | ஹபீப் ரஹ்மான் | மீன் கடை | 38 | ஒப்பந்தப்புள்ளி | 1,800/- |
| 07 | எம்.உதயகுமார் | மீன் கடை | 43 | மின் ஏலம் | 3,015/- |
| 08 | ஜே.ஆனந்தராஜ் | மீன் கடை | 44 | மின் ஏலம் | 3,015/- |
| 09 | வி.எம்.உபைதுல்லா | மீன் கடை | 48 | மின் ஏலம் | 4,000/- |
| 10 | வி.எம்.உபைதுல்லா | மீன் கடை | 59 | மின் ஏலம் | 5,250/- |

<u>2. ஆட்டிறைச்சி கடைகள்</u>

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | இனம் | கடை எண் | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | சிவகுமார்/டி.சிவராஜ் | ஆட்டிறைச்சி கடை | 22 | ஒப்பந்தப்புள்ளி | 3,600/- |
| 02 | கே.கருப்பாத்தாள் | ஆட்டிறைச்சி கடை | 23 | மின் ஏலம் | 3,300/- |
| 03 | எம்.கே.எஸ்.செந்தில் குமார். | ஆட்டிறைச்சி கடை | 24 | மின் ஏலம் | 4,000/- |
| 04 | எம்.கே.எஸ்.செந்தில் குமார். | ஆட்டிறைச்சி கடை | 25 | மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி | 4,000/- |
| 05 | பி.வெங்கடேஸ்ராவ் | ஆட்டிறைச்சி கடை | 29 | ஒப்பந்தப்புள்ளி | 3,700/- |
| 06 | பி.வெங்கடேஸ்ராவ் | ஆட்டிறைச்சி கடை | 30 | மின் ஏலம் | 4,200/- |

3. கருவாட்டு கடைகள்

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | இனம் | கடை எண் | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | பி.தீபன் | கருவாட்டு கடை | 49 | ஒப்பந்தப்புள்ளி | 4,549/- |
| 02 | பி.தீபன் | கருவாட்டு கடை | 50 | ஒப்பந்தப்புள்ளி | 3,049/- |
| 03 | பி.முருகேசன் | கருவாட்டு கடை | 54 | ஒப்பந்தப்புள்ளி | 3,750/- |

மேற்குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பு மாத வாடகை ரூ 3000/- ஆகும். இதில் கடை எண்கள் 22,31,48 மற்றும் 59 ஆகிய நான்கு கடைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரிக்கை பெறப்பட்டது. மற்ற 15 கடைகளுக்கு தலா ஒரு ஒப்பந்தப்புள்ளி/ஒரு ஏலத்தொகை மட்டும் பெறப்பட்டுள்ளது.

மாநகராட்சி ஒப்பந்த நிபந்தனைகளின்படி ஒருநபர் அதிகபட்சமாக இரண்டு கடைகளுக்கு மட்டுமே ஏலம் கோர இயலும். ஆனால் திரு. வி.எம்.உபைதுல்லா என்பவர் மாநகராட்சி நிபந்தனைகளை பின்பற்றாமல் கடை எண்கள் 31, 48 மற்றும் 59 ஆகிய முன்று மீன் கடைகளுக்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியிருந்தார். இதில் அதிக ஏலத்தொகை கோரிய இரண்டு கடைகளை (கடை எண்.31 மற்றும் 59) ஒப்படை செய்ய வரிவிதிப்பு மற்றுமு நிதிக்குழுவின் ஒப்புதல் வேண்டி நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

மீன் கடைகள்

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | இனம் | கடை எண் | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | வி.எம்.உபைதுல்லா | மீன் கடை | 31 | மின் ஏலம் | 6,300/- |
| | ரூபன் சக்கரவர்த்தி | | | ஒப்பந்தப்புள்ளி | 5,549/- |
| 02 | வி.எம்.உபைதுல்லா | மீன் கடை | 59 | மின் ஏலம் | 5,250/- |
| | வி.எம்.உபைதுல்லா | | | ஒப்பந்தப்புள்ளி | 4,500/- |

மேலும், ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ள கீழ்காணும் கடைகளையும் ஒப்படை செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

1. மீன் கடைகள்

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | இனம் | கடை எண் | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | எம்.ஹபீப் ரஹ்மான் | மீன் கடை | 4 | ஒப்பந்தப்புள்ளி | 4,550/- |
| 02 | பி.முருகேசன் | மீன் கடை | 34 | ஒப்பந்தப்புள்ளி | 4,500/- |

2. ஆட்டிறைச்சி கடைகள்

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | இனம் | கடை எண் | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | எம்.கே.எஸ்.செந்தில் குமார். | ஆட்டிறைச்சி கடை | 24 | மின் ஏலம் | 4,000/- |
| 02 | எம்.கே.எஸ்.செந்தில் குமார். | ஆட்டிறைச்சி கடை | 25 | மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி | 4,000/- |
| 03 | பி.வெங்கடேஸ்ராவ் | ஆட்டிறைச்சி கடை | 30 | மின் ஏலம் | 4,200/- |

3. கருவாட்டு கடைகள்

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | இனம் | கடை எண் | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | பி.தீபன் | கருவாட்டு கடை | 49 | ஒப்பந்தப்புள்ளி | 4,549/- |
| 02 | பி.முருகேசன் | கருவாட்டு கடை | 54 | ஒப்பந்தப்புள்ளி | 3,750/- |

மேற்காண் பொருளை பரிசீலித்த வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.102, நாள் 22.12.2010ன் படி கீழ்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

1. பொருளில் மீன் கடைகள் கடை எண் -31 மற்றும் 59ற்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வாயிலாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதால் உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கையினை ஏற்று கடை உரிமம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. ஒரு ஒப்பந்தப்புள்ளி கோரிக்கை மட்டும் வரப்பெற்றுள்ளதால் பொருளில் குறிப்பிட்டுள்ள கடை எண்கள் 4,34,24,25,30,49,54 ஆகியவற்றிற்கும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் பெறப்படாத பிற கடைகளுடன் சேர்ந்து மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.

3. பொருளில் கடை எண் 22ற்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வாயிலாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டாலும் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.3600/- கோரப்பட்டு உள்ளது. இக்கடைக்கு மறு ஏலம் விடுவதனால் கூடுதல் வாடகை கிடைக்க வாய்ப்புகள் இருப்பதனால் கடை எண் 22ற்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. எனவே இது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண் 4006 /2010/ அ1 தெ

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 188 நாள் 05.01.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 102 நாள் 22.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு 1, 2, 3, அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 24**

பொருள் : கழிவு நீர் அகற்றும் மாநகராட்சி லாரிகள் - செப்டிக் டேங்கில் உள்ள கழிவு நீரை அகற்ற கட்டணம் உயர்த்தி நிர்ணயம் செய்தல் - தொடர்பு.

----------------------

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களில் உள்ள செப்டிக் டேங்குகளில் கழிவு நீரை அகற்ற மாநகராட்சி லாரிகளுக்கு நடை ஒன்றிற்கு ரூ.300/- வீதம் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இக்கட்டணம் நிர்ணயம் செய்து சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. மேலும் இவ்வாகனங்களுக்கான எரிபொருள் செலவு, பராமரிப்பு செலவு, ஓட்டுனர் மற்றும் துப்பரவு பணியாளர் ஊதியங்கள் மற்றும் நிர்வாகச் செலவினங்கள் உயர்ந்துள்ளதால் இக்கட்டணத்தை கீழ்கண்டவாறு உயர்த்தி நிர்ணயம் செய்ய சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண் 143 நாள் 14.12.2010 மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 100 நாள் 15.12.2010 ஆகிய தீர்மானங்களில் பரிந்துரைத்துள்ளதால் இப்பொருள் குறித்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| | | நடை ஒன்றிற்கு |
|---|---|---|
| செட்டிக் டேங்குகளில் உள்ள கழிவு நீரை மட்டும் அகற்றுவதற்கு | - | ரூ.500/- |

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண் :12348 / 2010 / எம்.இ.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 189 நாள் 05.01.2011</u>**

சுகாதார நிலைக்குழுவின் தீர்மானம் எண் 143 நாள் 14.12.2010 மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 100 நாள் 15.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 25**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - காந்திபுரம் 8ம் நம்பர் - சீனிவாசபுரம் தினசரி காய்கறி மற்றும் மாமிச அங்காடியில் தினசரி வசூல் செய்வதை மாத வாடகையாக மாற்றுவது தொடர்பாக.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்தில் சீனிவாசபுரத்தில் (4x4சதுரடி) அளவுள்ள 124 தினசரி காய்கறி கடைகள் மற்றும் 24 மாமிச கடைகளுக்கு தினசரி வாடகையாக கடை ஒன்றுக்கு ரூ.20/- வீதம் கடைகளில் அலுவலக பணியாளர் மூலமாக வசூல் செய்து வடக்கு மண்டல கருவூலத்தில் செலுத்தப்பட்டுவருகிறது.

மேற்படி தினசரி வாடகையை மாத வாடகையாக கணக்கிட்டு கடை ஒதுக்கீட்டுதாரர்கள் பெயரில் மாதம் ஒரு முறை மாதவாடகையாக அவர்களே வடக்கு மண்டல கருவூலத்தில் 10ம் தேதிக்குள்ளாக ரொக்கமாகவோ/ பணவிடை மூலமாகவோ/ காசோலைமூலமாகவோ செலுத்தவும் அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் வாடகை கட்டணம் செலுத்துகின்ற நாள் வரை 18%அபராத தொகையுடன் வாடகை கட்டணம் வசூலிக்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 15.12.10-ம் தேதிய தீர்மான எண்.88-ல் தினசரி காய்கறி கடைகள் மற்றும் மாமிச கடைகளுக்கு வாடகை உயர்வு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தால் தினசரி வாடகையாக ரூ. 25 நிர்ணயம் செய்யவும், மாதாந்திர அடிப்படையில் வாடகை வசூல் செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 13628/2010/அ7(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 190 நாள் 05.01.2011**

பொருள் ஒத்திவைக்கப்பட்டது.

---

## பொருள் எண் 26

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு 30-ல் சத்தி சாலை ஆம்னி பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக கட்டித்தில் ஒரு அறை மட்டும் ஸ்டோர் ரூம் ஆக பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது புதியதாக ஸ்டோர் ரூம் கட்டப்பட்டு உள்ளதால் இந்த கட்டிடம் காலியாக உள்ளது.

மேற்படி அறையை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப்பணித்துறை வழிகாட்டுதல்படி அறைக்கு மாதம் உரிமம் தொகை ரூ.1,804/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத்தொகை, வைப்புத் தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும், அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் அனுமதி பெற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 15.12.10-ம் தேதிய தீர்மான எண்.86-ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ. 20,000/- |
| காப்புத்தொகை | - ரூ. 20,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | - ரூ.1,00,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை | - ரூ. 50,000/- |

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 10955/2010/அ7(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 191 நாள் 05.01.2011**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 86 நாள் 15.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 27

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சி வணிகவளாக கடைகளில் டாடாபாத் ராஜீ ரோட்டில் அமைந்துள்ள கடை எண் 1A-க்கு 25.11.2010-ல் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஏலத்தில் கலந்துகொண்டு ஏலம் கோரிய விபரம் கீழே வருமாறு.

| அமைவிடம் மற்றும் கடை எண். | ஏலதாரர் பெயர் | மின் ஏலத்தில் கேட்கப்பட்ட உச்ச கேள்வி | ஒப்பந்தப்புள்ளிகள் கோரிய தொகை |
|---|---|---|---|
| டாடாபாத் ராஜீ ரோட்டில் அமைந்துள்ள கடை எண் 1A | 1. திரு. R.ராஜேந்திரன்<br>2. திரு. M.மனோகரன்.<br>3. திரு.M.சத்தியமூர்த்தி<br>4. திரு.C.பாலகிருஷ்ணன்<br>5. திரு.R.ஜெகதிஷ்<br>6. திரு.P.சண்முகசுந்தரம்<br>7, திரு.M.ராஜ்குமார்<br>8. திரு.S.வேலுச்சாமி | ரூ. 5,850/- | ரூ. 10,101/-<br>ரூ. 2,700/-<br>ரூ. 2,900/-<br><br>ரூ. 4,010/-<br>ரூ. 4,575/-<br>ரூ. 5,500/- |

25.11.2010 அன்று நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட கடை எண்.1Aக்கு அரசு வழிக்காட்டி மதிப்பீடு ரூ.3600/- மாத வாடகை என்று நிர்ணயம் செய்யப்பட்டது. திரு.R.ராஜேந்திரன் அவர்கள் ஒப்பந்த புள்ளி மூலம் உச்சத் தொகையாக ரூ.10,101/- கோரியுள்ளார். இந்த ஏலத்தில் உச்ச கேள்வியாக ரூ.10,101/-கேட்கப்பட்டுள்ளதால் திரு.R.ராஜேந்திரன் அவர்களின் உச்ச கேள்வியான ரூ.10,101/-ஐ ஏற்று கடையை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 15.12.10-ம் தேதிய தீர்மான எண்.87-ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 10956/2010/அ7(வ)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 192 நாள் 05.01.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 87 நாள் 15.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 28

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட ராதாகிருஷ்ணா ரோடு வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் புதியதாக கட்டிய சிற்றுண்டி அறை, சிற்றுண்டி அறை அளவு - 117.19 ச.மீ, கடைகளுக்கு மறுமின் ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி பிரதான அலுவலகத்தில் 07.12.2010அன்று நடைபெற்றது. மறு மின் ஏலத்தில் கலந்துகொண்டு ஏலம் கோரிய விபரம் கீழே வருமாறு.

| அமைவிடம் மற்றும் கடை எண். | ஏலதாரர் பெயர் | மின் ஏலத்தில் கேட்கப்பட்ட உச்ச கேள்வி | ஒப்பந்தப்புள்ளிகள் கோரிய தொகை |
|---|---|---|---|
| ஆம்னி பேருந்து நிலையத்தில் ராதாகிருஷ்ணா ரோடு வணிக வளாகம் அமைந்துள்ள இடத்தில் 117.19 ச.மீ அளவுள்ள சிற்றுண்டி அறை. | 1. திரு.N.சுந்தரராஜன்<br>2. திரு.A.H.J. மகாவிஷ்னு<br>3. திரு.S.சஜிப் | ரூ.83,500/-<br>-<br>- | ரூ.72,000/-<br>ரூ.81,000/-<br>ரூ.80,010/-<br>- |

திரு.N.சுந்தரராஜன் அவர்கள் உச்ச ஏலத்தொகையில் (ரூ.60,000/-) 5% கூடுதலாக ரூ.63,000/- மாத வாடகைக்கு செலுத்தி மறுஏலம் கோரியதால் 07.12.2010 அன்று நடைபெற்ற மறு மின் ஏலத்தில் சிற்றுண்டி அறைக்கு மாத வாடகையாக ரூ.63,000/- (Base Value) என நிர்ணயம் செய்யப்பட்டது. திரு.N.சுந்தரராஜன் அவர்கள் மின் ஏலம் மூலம் உச்சத் தொகையாக ரூ.83,500/- கோரியுள்ளார். இந்த ஏலத்தில் உச்ச கேள்வியாக ரூ.83,500/-கேட்கப்பட்டுள்ளதால் திரு. N.சுந்தரராஜன் அவர்களின் உச்ச கேள்வியான ரூ.83,500/-ஐ ஏற்று சிற்றுண்டி அறையை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 15.12.10-ம் தேதிய தீர்மான எண்.94-ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 06526/2010/அ7(வ)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 193 நாள் 05.01.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 94 நாள் 15.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 29

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் வணிக வளாக கடைகளுக்கு உரிமம் புதுப்பித்து வாடகை உயர்வு செய்ய மாமான்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

பார்வை : அரசாணை (நிலை) எண்.92 நாள்.03.07.2007.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாக கடைகளின் மூன்றாண்டு உரிம காலம் முடிவடைகிறது. மேற்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை இருபதாண்டுகள்) எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07 – ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்ய உரிம கட்டணம் அடங்கிய பட்டியல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடம் - பட்டேல் ரோடு

| வ. எண் | கடை எண் | பெயர் | உரிமம் காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்கப் பட வேண்டிய நாள் | மாத வாடகை ரூபாய் | அரசு ஆணை எண்92 ந.நி மற்றும் கு.வ.துறை நாள் 3.7.07-ன் படி 15% உயர்வு செய்த மாத வாடகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | K..கந்தசாமி | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 2 | 3 | K.கந்தசாமி | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 3 | 4 | சுப்ரமணி | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 4 | 5 | R.சண்முக சுந்தரம் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 5 | 6 | N.தேவராஜன் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 6 | 7 | மணி | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 7 | 8 | பிரேம் ஆனந்த் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 8 | 9 | பிரேம் ஆனந்த் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 9 | 10 | கிருஷ்ணமாச்சரி | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 10 | 11 | ஆன்வர்மொய்தீன்புலவனார் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 11 | 12 | M.J.ஜான் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 12 | 13 | ஷேக் முஜிபுர்ரஹ்மான் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 13 | 14 | L.K.கந்தசாமி | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 14 | 15 | A.S.தூயமணி | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 15 | 16 | வீ.வெங்கடேஷ் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 16 | 17 | அமீர் மொய்தீன் புலவனார் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 17 | 18 | ஏஸ்.டி.குதிர் ஆலம் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 18 | 19 | ஆர்.தண்டபாணி | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 19 | 20 | பி.பழனிசாமி | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 20 | 21 | S.P.ரவீந்தரன் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 21 | 22 | S.P.ஆனந்தன் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 22 | 23 | A.சக்திவேல் | 31.03.2010 | 01.04.2010 | 2200 | 2530 |
| 23 | 24 | R.M.நாரயணன் | 31.03.2010 | 01.04.2010 | 2466 | 2836 |

இடம் - நியூ டாடாபாத் ராஜீ ரோடு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24 | 10 | கோவை வடக்கு வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் | 31.08.2009 | 01.09.2009 | 1760 | 2024 |
| 25 | 11 | கோவை வடக்கு வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் | 31.08.2009 | 01.09.2009 | 1760 | 2024 |
| 26 | 12 | கோவை வடக்கு வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் | 31.08.2009 | 01.09.2009 | 1760 | 2024 |
| 27 | 13 | வீ.பழனிசாமி | 13.08.2009 | 14.08.2009 | 2829 | 3254 |
| 28 | 14 | பிரபுராம் | 16.11.2008 | 17.11.2008 | 2777 | 3194 |
| 29 | 15 | K.சொர்ணலிங்கம் | 17.11.2010 | 18.11.2010 | 2864 | 3294 |

இடம் - டாடாபாத் ராஜீ ரோடு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 30 | 2 | துணை காவல் துறை கண்காணிப்பாளர் சிறப்பு புலனாய்வுத் துறை | 30.04.2009 | 01.05.2009 | 13212 | 15194 |

இடம் - பழைய டாடாபாத்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 31 | 1 | S.A.சையத்ஹீசைன் | 31.10.2010 | 01.11.2010 | 2515 | 2893 |

இடம் - Dr. அழகப்பா ரோடு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 32 | 1 | C.கந்தசாமி | 02.11.2006 | 03.11.2006 | 850 | 1125 |
| 33 | 2 | C.கந்தசாமி | 02.11.2006 | 03.11.2006 | 850 | 1125 |
| 34 | 3 | C.கந்தசாமி | 07.01.2006 | 08.01.2006 | 800 | 1058 |

[

இடம் - காந்திபுரம் 7-வது வீதி தொடர்ச்சி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 35 | 2 | M.சுமதி | 09.11.2010 | 10.11.2010 | 4313 | 4960 |
| 36 | 3 | தமிழ்நாடு நுகர்பொருள் அங்காடி | 21.01.2010 | 22.01.2010 | 1533 | 1763 |

இடம் - காந்திபுரம் பொன்னே வீதி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 37 | 1 | ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் | 30.11.2010 | 01.12.2010 | 15525 | 17854 |
| 38 | 2 | ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் | 30.11.2010 | 01.12.2010 | 17020 | 19573 |
| 39 | 3 | B.கமலாவதி | 30.11.2010 | 01.12.2010 | 16733 | 19243 |
| 40 | 4 | K.முத்துக்குமார் | 30.11.2010 | 01.12.2010 | 5900 | 6785 |
| 41 | 5 | K.அசோக் | 30.11.2010 | 01.12.2010 | 5175 | 5952 |
| 42 | 6 | N.ரகோத்தமன் | 30.11.2010 | 01.12.2010 | 5813 | 6685 |

இடம் - ராயப்பா நகர் - கணபதி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 43 | 1 | B.S.N.L. | 07.02.2008 | 08.02.2008 | 19398 | 22308 |
| 44 | 2 | கணபதி நூலக கிளை | 05.01.2010 | 06.01.2010 | 2385 | 2743 |

இடம் - சத்தி ரோடு ஆம்னி பேருந்து கட்டண பதிவறைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 45 | 7 | K.ராஜீ | 30.06.2009 | 01.07.2009 | 4700 | 5405 |
| 46 | 8 | K.ராஜீ | 30.06.2009 | 01.07.2009 | 4100 | 4715 |
| 47 | 10 | எஸ்.ஆர். டிராவல்ஸ் | 30.06.2009 | 01.07.2009 | 7200 | 8280 |
| 48 | 12 | R.பாஸ்கரன் | 30.06.2009 | 01.07.2009 | 7200 | 8280 |
| 49 | 13 | S.P.சுவாமிநாதன் | 30.06.2009 | 01.07.2009 | 7150 | 8223 |
| 50 | 14 | N.J.K. Super டிராவல்ஸ் | 30.06.2009 | 01.07.2009 | 7150 | 8223 |
| 51 | 15 | யுனைடெட் கேப்ஸ் | 30.06.2009 | 01.07.2009 | 7500 | 8625 |
| 52 | 16 | N.ராஜேஸ் | 30.06.2009 | 01.07.2009 | 7500 | 8625 |
| 53 | 11 | சிவராஜ் | 30.06.2010 | 01.07.2010 | 11100 | 12765 |

இடம் - ஆம்னி பேருந்து நிலையம் - புதிய கட்டண பதிவறைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 54 | A1 | மனோஜ் செரியன் | 30.09.2010 | 01.10.2010 | 2700 | 3105 |
| 55 | A2 | T.S.பழனிசாமி | 30.09.2010 | 01.10.2010 | 2700 | 3105 |
| 56 | A3 | A.சின்னசாமி | 30.09.2010 | 01.10.2010 | 2800 | 3320 |
| 57 | A4 | அப்சல் | 30.09.2010 | 01.10.2010 | 3200 | 3680 |
| 58 | A5 | R.வெங்கடேசன் | 30.09.2010 | 01.10.2010 | 3400 | 3910 |
| 59 | A6 | R.வெங்கடேஸ்வரன் | 30.09.2010 | 01.10.2010 | 3900 | 4485 |
| 60 | A7 | S.கனகராஜ் | 30.09.2010 | 01.10.2010 | 4100 | 4715 |
| 61 | A8 | H.முகமது மொய்தீன் | 30.09.2010 | 01.10.2010 | 4000 | 4600 |
| 62 | A9 | L.ரமேஷ்குமார் | 30.09.2010 | 01.10.2010 | 4200 | 4830 |
| 63 | A10 | D.சுப்புலட்சுமி | 30.09.2010 | 01.10.2010 | 4100 | 4715 |
| 64 | A11 | M.ஸ்டீபன் | 30.09.2010 | 01.10.2010 | 4100 | 4715 |
| 65 | A12 | N.P.பிரபுராஜ் | 30.09.2010 | 01.10.2010 | 4100 | 4715 |
| 66 | A13 | D.சுலோசனா | 30.09.2010 | 01.10.2010 | 4100 | 4715 |
| 67 | A14 | N.கிருஷ்ணமூர்த்தி | 30.09.2010 | 01.10.2010 | 4100 | 4715 |
| 68 | A15 | J.J. டிராவல்ஸ் | 30.09.2010 | 01.10.2010 | 4100 | 4715 |

மேற்படி கடைகளுக்கு அரசு ஆணையின்படி ஏற்கனவே உள்ள மாதவாடகையில் 15% வாடகை உயர்வு செய்து மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 15.12.10-ம் தேதிய தீர்மான எண்.89-ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 011655/2010/B1(வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 194 நாள் 05.01.2011</u>

1. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 89 நாள் 15.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

2. அனைத்து மாதாந்திர உரிம இனங்களின் உரிமதாரர்களிடமிருந்து புதிய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 30

கோவை மாநகராட்சியில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் தற்போது அமைக்கப்பட்டு வரும் உக்கடம் மற்றும் நஞ்சுண்டாபுரம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுடன், ஒண்டிப்புதூர் பகுதியில் அமைக்கப்படவுள்ள சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படும் கழிவு நீரினை குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள சில தனியார் நிறுவனங்கள் இசைவு தெரிவித்து இருந்ததன் பேரிலும், தனியார் தொழிற்சாலைக்கு விற்பனை செய்வதின் மூலம் வருவாய் ஈட்ட வழி செய்யும் வகையிலும், மாநகராட்சியால் விலை நிர்ணயிக்க பொருள் வைக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 39, நாள் 17.08.2010–ல் ரூ.10.00/1000 லிட்டர் என்ற விகிதத்தில் விற்பனை செய்ய ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டது.

மாமன்றம் தனது தீர்மான எண். 102 நாள். 29.09.2010ல் ரூ. 20.00/1000 லிட்டர் என்ற விலைவிகிதம் நிர்ணயம் செய்தும், தேவைப்படும் நிறுவனங்கள் தங்கள் சொந்த பொறுப்பில் தேவையான கொள்ளளவு சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை எடுத்துக்கொள்ளவும் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதுகுறித்து கழிவு நீரினை பயன்படுத்த விருப்பம் தெரிவித்த நிறுவனங்களுக்கு மன்றத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட விலை குறித்து கடந்த 29.10.2010–ல் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

கீழ்க்குறிப்பிட்டுள்ள அந்நிறுவனங்கள் தங்கள் சொந்த பொறுப்பில் பைப் லைன் அமைத்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை பயன்படுத்த எடுத்துச் செல்வதற்கு மாமன்றம் நிர்ணயித்துள்ள தொகை மிகவும் கூடுதலென தெரிவித்து மாமன்றம் நிர்ணயித்துள்ள தொகையினை குறைத்து நிர்ணயம் செய்துதர அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் விண்ணப்பித்துள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | கடிதம் பெறப்பட்ட தேதி | தற்சமயம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்ட கொள்ளளவு |
|---|---|---|---|
| 1 | திரு. லார்சன் & டப்ரோ லிமிடெட், மலுமிச்சம்பட்டி, கோவை | 09.11.2010 | 1 எம்.எல்.டி / தினசரி |
| 2 | திரு. தி கோயம்புத்தூர் கோல்ப் கிளப், செட்டிபாளையம் | 16.11.2010 | 4 எம்.எல்.டி / தினசரி |
| 3 | திரு. ரேக்இண்டோ கோவை டவுன்ஷிப் லிமிடெட், பச்சாபாளையம் கிராமம், பேரூர், கோவை | 26.11.2010 | 4 எம்.எல்.டி / தினசரி |
| 4 | திரு. ஷாரதா டெரி புராடக்ட்ஸ் லிமிடெட், நெல்லிதுறை, மேட்டுப்பாளையம் | 29.11.2010 | 10 எம்.எல்.டி / தினசரி |

மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து, தற்போது பெறப்படும் கழிவுநீர் கொள்ளளவிற்கு சுத்திகரிப்பு செய்ய ஆகும் பராமரிப்புக் கட்டணம், மின் கட்டணம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு கணக்கிடப்பட்டு மீண்டும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 105 நாள் 22.12.2010ன்படி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை ரூ. 10/1000 லிட்டர் என்ற விலை விகிதத்தில், தேவைப்படும் நிறுவனத்திற்கு சொந்த பொறுப்பில் பைப்லைன் அமைத்து எடுத்துக்கொள்ள விலை நிர்ணயம் செய்து ஒப்புதல் அளித்துள்ளதால், மாமன்றம் தனது தீர்மானம் எண். 102, நாள் 29.09.2010 ல் தீர்மானித்துள்ள விலை விகிதத்தினை மீண்டுமொரு முறை பரிசீலித்து விலை குறைத்து முடிவெடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரினை தேவைப்படும் நிறுவனங்கள் தமது சொந்த பொறுப்பில் எடுத்துக்கொள்ள, மேற்படி சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரின் விலை விகிதத்தினை மாமன்றம் மீண்டுமொரு முறை பரிசீலித்து முடிவு செய்யலாம்.

ந.க. எண். 14353/09/ஜே.ன்.4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 195 நாள் 05.01.2011</u>

பொருள் ஒத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 31**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – வரிவசூல் மையங்களில் சொத்துவரி, குடிநீர் வரி மற்றும் ஏனைய வரிகளின் வசூல் பணியை கவனிக்க தனியார் வங்கிகளோடு ஒப்பந்தம் செய்வது – தொடர்பாக.

பார்வை :
1. H.D.F.C. வங்கி கடிதம் நாள் 26.11.2010
2. AXIS வங்கி கடிதம் Axis/CA/2010-11 நாள்.26.11.2010
3. City Union Bank Ltd வங்கி கடிதம் நாள் 02.12.2010
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 103 நாள் 22.12.2010

------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தற்போது சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, காலியிடவரி, வரியில்லா இனங்கள், D&O Trades, PFA Trades மற்றும் இதர இனங்கள் ஆகிய அனைத்து வரிகளும் மாநகராட்சி வரிவசூல் மையங்களிலும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இப்பணியை 17 வரிவசூல் மையங்களில் நமது மாநகராட்சியின் வரிதண்டலர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் ஒவ்வொருவரும் வசூல் பணியை K.G.I.S.L. பணியாளரின் உதவியோடு மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் மாநகராட்சி வரிவசூல் மையங்கள் அல்லாமல் 16 வங்கி கிளைகளிலும் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதர வரி இனங்கள் ஏதும் வங்கிகளில் வசூலிக்கப்படுவதில்லை.

இந்நிலையில் மாநகராட்சி வரிவசூல் மையங்களில் வங்கி பணியாளர்கள் மூலம் மாநகராட்சி வரி இனங்களை வசூல் செய்வது தொடர்பாக வங்கிகளுடன் 25.11.2010 அன்று மாலை 5 மணிக்கு துணை ஆணையர் தலைமையில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இதில் H.D.FC., AXIS & City Union Bank Ltd வங்கிகள் மட்டும் தங்கள் வங்கிப் பணியாளர்களை கொண்டு வரிவசூல் பணியினை மேற்கொள்வதாக தெரிவித்து இசைவு கடிதம் கொடுத்துள்ளனர்.

இதில் AXIS வங்கி தற்போது திருச்சி மாநகராட்சியில் வரி வசூல் பணியை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போது மேற்காண் வங்கிகளுக்கு மாநகராட்சி வரி வசூல் மையங்களில் வரி வசூல் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கும் பட்சத்தில் மேற்படி வரி வசூல் மையங்களில் பணியாற்றி வரும் மாநகராட்சி இளநிலை உதவியாளர்கள் மற்றும் வரி தண்டலர்கள் ஆகியோரின் பணிப்பளு குறைவதோடு, இவர்களை முழு நேர வரி வசூல் மற்றும் இதர பணிக்கு ஈடுபடுத்திக்கொள்ளலாம். இதனால் வரி வசூல் பணியும் துரிதமாக நடைபெற வாய்ப்புள்ளது.

எனவே H.D.FC. வங்கி மேற்கு மண்டலத்திலும் AXIS வங்கி தெற்கு மண்டலத்திலும் City Union Bank Ltd வங்கி வடக்கு மற்றும் கிழக்கு மண்டலத்திலும் மாநகராட்சி வரி வசூல் மையங்களில் வங்கி பணியாளர்கள் மூலம் மாநகராட்சி வரி இனங்களை வசூல் செய்ய மேற்குறிப்பிட்ட வங்கிகளோடு ஒப்பந்தம் மேற்கொள்ள வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண் : 12546/2010/பி 7

**மாநகர மன்ற தீர்மானம் எண் 196 நாள் 05.01.2011**

மேற்கு மண்டல வசூல் மையங்களில் HDFC வங்கி, தெற்கு மண்டல வசூல் மையங்களில் SBI வங்கி, வடக்கு மற்றும் கிழக்கு மண்டல வசூல் மையங்களில் சிட்டி யூனியன் வங்கிக்கு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் பிற வங்கிகளிடமிருந்து கோரிக்கைகள் பெறப்படின் பரிசீலனை செய்து, தேவைக்கேற்பவும், வங்கிகளின் சேவைகளின் அடிப்படையிலும் ஆணையர் அவர்களே பரிசீலனை செய்து ஒதுக்கீடு செய்துகொள்ள அனுமதிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 32

பொருள் : பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – நவீன இயந்திரம் பொருத்தப்பட்ட லாரிகள் மூலம் செப்டிக் டேங்க் சுத்தம் செய்ய கட்டணம் நிர்ணயம் செய்தல் - தொடர்பு.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சியால் நவீன இயந்திரம் பொருத்தப்பட்ட லாரிகள் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் பணிக்காக வாங்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் மூலம் செப்டிக் டேங்க் கழிவு நீரோடு கழிவுகளையும் சுத்தம் செய்ய இயலும்.

எனவே மாநகராட்சிப் பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வணிக வளாகங்களில் உள்ள செப்டிக் டேங்குகள் இவ்வகை லாரிகளினால் சுத்தம் செய்ய நடை ஒன்றிற்கு ரூ.1500/- கட்டணமாக வசூல் செய்ய சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண் 144 நாள் 14.12.2010 மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 99 நாள் 15.12.2010 ஆகிய தீர்மானங்களில் பரிந்துரைத்துள்ளதால் இப்பொருள் குறித்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண் :12347 / 2010 / எம்.இ.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 197 நாள் 05.01.2011**

சுகாதார நிலைக்குழுவின் தீர்மானம் எண் 144 நாள் 14.12.10 மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 99 நாள் 15.12.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 33

பொருள் : மாநகராட்சி பகுதிகளில் உள்ள வணிக நிறுவனங்கள், திருமண மண்டபங்கள், பொது நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் ஏற்படும் குப்பைக் கழிவுகளை அகற்ற வசூலிக்கப்படும் கட்டணத்தை உயர்த்தி நிர்ணயம் செய்தல்- தொடர்பு.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் உள்ள வணிக நிறுவனங்கள், திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் மற்றும் பொது நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் ஏற்படும் குப்பைக் கழிவுகளை அகற்ற மாட்டு வண்டி ஒன்றிற்கு ரூ.50/-, டிராக்டர் டிரிப் ஒன்றிற்கு ரூ.250/- என நிர்ணயம் செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது.

இக்கட்டணம் நிர்ணயம் செய்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. தற்போது குப்பைகள் வெள்ளலூர் உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்வதாலும் வாகனங்களுக்கான எரிபொருள் செலவு, பராமரிப்பு செலவு ஓட்டுநர் மற்றும் துப்புரவு பணியாளர் ஊதியங்கள் மற்றும் நிர்வாகச் செலவினங்கள் உயர்ந்துள்ளதால் இக்கட்டணத்தை கீழ்க்கண்டவாறு உயர்த்தி நிர்ணயம் செய்ய சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண் 145 நாள் 14.12.10 மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 101 நாள் 15.12.10 ஆகிய தீர்மானங்களில் பரிந்துரைத்துள்ளதால், இப்பொருள் குறித்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| | நடை ஒன்றிற்கு |
|---|---|
| 1. மாட்டு வண்டி, ஆட்டோ | - ரூ. 150/- |
| 2. டிராக்டர் | - ரூ. 750/- |
| 3. லாரி | - ரூ. 1500/- |

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண் :12708/ 2010 / எம்.இ.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 198 நாள் 05.01.2011**

சுகாதார நிலைக்குழுவின் தீர்மானம் எண் 145 நாள் 14.12.10 மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 101 நாள் 15.12.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. உயர்த்தப்பட்ட கட்டண விகிதங்களை 01.01.2011 முதல் வசூலிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 34**

பொருள் : கோயம்புத்தூர் வடக்கு மண்டலம் - டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை – சர்வே வார்டு எண் 11 பிளாக் எண் 33. நகரளவு எண் 1243/ 1ல் 6293 சதுரடி நிலத்தினை சென்டரல் போர்டு பார் ஒர்க்கர்ஸ் எஜீகேசன் (Central Board for Worker Education ) நிறுவனத்திற்கு அரசு அனுமதி பெற்று, சந்தை நிலவரப்படி நில கிரயத்தொகை பெற்று நிலமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட்டது. மாமன்ற தீர்மானம் எண் 177 நாள் 31.10.2003. – மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படுவதால் தீர்மானம் மற்றும் உத்தேசம் - திரும்ப பெறுதல் - தொடர்பாக.

பார்வை : மாமன்ற தீர்மானம் எண் .177 நாள் .31.10.2003.

பார்வையில் கண்ட மாமன்ற தீர்மானத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான 6293 சதுரடி நிலத்தினை அரசின் அனுமதி பெற்று, தற்போதைய சந்தை நிலவரப்படி நிலக்கிரயத் தொகையைப் பெற்றுக் கொண்டு, நிலமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட்டு உத்தேசம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை இந்நிகழ்வில் எவ்வித உத்திரவும் "Central Board for Worker Education " நிறுவனத்திற்கு நிலம் வழங்க பெறப்படவில்லை.

தற்சமயம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 6293 சதுரடி நிலம் பொதுமக்கள் நலனுக்கு அத்தியாவசிய தேவை ஏற்பட்டுள்ளதால், பார்வையில் கண்ட மாமன்ற தீர்மானத்தினை ரத்து செய்வதற்கும், மேற்கண்ட 6293 சதுரடி நிலத்தினை மாநகராட்சி தன் பொறுப்பில் வைத்துக் கொள்வதற்கும் பொருள் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்ற தீர்மானம் எண் 177, நாள் 31.10.2003 ஐ ரத்து செய்யலாம். 6293 சதுரடி நிலத்தினை மாநகராட்சி அத்தியாவசிய உபயோகத்திற்கு உபயோகப்படுத்தலாம்.

ந.க.எண் 19019/ 99 / எம் எச் 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 199 நாள் 05.01.2011**

மாநகர மன்ற தீர்மானம் எண். 177 நாள் 30.10.2003 ஐ ரத்து செய்யவும், பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 6293 சதுரஅடி நிலத்தினை மாநகராட்சியின் அத்தியாவசிய உபயோகத்திற்கு பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 35

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 30.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9183/10/ எம்.டி.2 | வார்டு எண்.33 ராதாகிருஷ்ணன் சாலையில் மூடுபலகையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 15.98 | 15-12-2010 இரண்டாம் அழைப்பு | திருமதி. சி. பாப்பாத்தி. | 6.85% அதிகம் | 4.95% அதிகம் |
| 2 | 7292/10/ எம்.டி.2 | வார்டு எண்.65 ரங்கா லே அவுட்- பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் அமைத்தல் | 10.70 | 16-12-2010 இரண்டாம் அழைப்பு | திரு. எஸ். ராஜீ | 5.19% அதிகம் | 4.99% அதிகம் |
| 3 | 10210/10/ எம்.டி.2 | வார்டு எண்.69 பூம்புகார் நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 13.22 | 20-12-2010 இரண்டாம் அழைப்பு | திரு. ஆர். செல்வராஜ் | 8.85% அதிகம் | 4.85% அதிகம் |
| 4 | 12301/10/ எம்.டி.2 | வார்டு எண்.2-ல் உள்ள கருப்பண்ண கவுண்டர் லே அவுட்டில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் | 45.27 | 22-12-2010 முதல் அழைப்பு | தி/ள். பி. செந்தில் & கோ. | 5.04% அதிகம் | 4.87% அதிகம் |
| 5 | 9189/10/ எம்.டி.2 | வார்டு எண்.32 டாடாபாத் 9வது வீதியில் மூடுபலகையுடன் மழைநீர் வடிகால் அமைத்தல் | 16.76 | 15-12-2010 இரண்டாம் அழைப்பு | திருமதி. சி. பாப்பாத்தி. | 6.97% அதிகம் | 4.74% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1 முதல் 5 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 9183/2010/எம்.டி.2

### மாநகர மன்ற தீர்மானம் எண் 200 நாள் 05.01.2011

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 36

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 30.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8435/10/ எம்.டி.1 | வார்டு எண்.35 முத்து மாரியம்மன் கோவில் வீதியில் மூடுபலகையுடன் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் பராமரித்தல் | 12.50 | 24-12-2010 இரண்டாம் அழைப்பு | திருமதி.சி. பாப்பாத்தி | 4.22 அதிகம் | 4.03 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 8435/2010/எம்.டி.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 201 நாள் 05.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 37**

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 30.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7031/10/ எம்.டி.4 | வார்டு எண்.13-ல் உள்ள பாரதி நகர் 1 முதல் 6 வரையுள்ள தெருக்களில் மழைநீர் வடிகால் திரும்ப கட்டுதல் | 36.50 | 22-12-10 முதல் அழைப்பு | தி/ள்.பி. செந்தில் & கோ. | 5.04% அதிகம் | 4.69% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 7031/2010/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 202 நாள் 05.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 38**

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 30.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10985/10/ எம்.டி.4 | வார்டு எண்.25-க்குட்பட்ட ஆர்ட்ஸ் காலேஜ் ரோட்டில் திருச்சி சாலை முதல் கே.ஜி.மருத்துவமனை சாலை வரை மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் மற்றும் நடைபாதை அமைத்தல் | 40.00 | 22-12-10 முதல் அழைப்பு | தி/ள். எம். எஸ். இஞ்சினியர்ஸ் | 7.20% அதிகம் | 4.94% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 10985/2010/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 203 நாள் 05.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 39

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 24.12.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9176/10/ எம்.டி.2 | வார்டு எண்.69 விஸ்வநாதபரம் பிளாக் A பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 19.83 | 14-12-2010 இரண்டாம் அழைப்பு | ஸ்ரீ சபரி அன் கோ | 8.53 அதிகம் | 4.40 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 9176/2010/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 204 நாள் 05.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 40

பொருள் - கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - - வார்டு எண் 22 – ராமசாமி நகரில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூலகம் கட்ட அனுமதி கோரியது – குறித்து.

----------

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம், வார்டு எண் 22 பங்கஜா மில் ரோட்டில் உள்ள ராமசாமி நகர் ரிசர்வ் சைட்டில் நூலகம் கட்ட பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு கோவை கிழக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 10,50,000/- (ரூபாய் பத்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. நூலகம் கட்ட தேர்வு செய்யப்பட்ட இடம் மாநகராட்சிக்குச் சொந்தமான பொது பயன்பாட்டு இடம் ஆகும். இந்நிலையில் திரு தங்கவேல் என்பவர் வழக்கு எண். O.S.No. 35/2010-ல் மேற்படி இடம் தனக்கு சொந்தமானது என்றும் இங்கு அத்துமீறி யாரும் நுழையக்கூடாது எனவும் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து மாநகராட்சி வழக்குரைஞரின் கருத்துரு பெறப்பட்டது. மாநகராட்சி வழக்குரைஞரின் கருத்துருபடி பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மேற்படி இடத்தில் நூலகம் கட்ட பொதுமக்களின் விண்ணப்பத்தினை பெற்று மாமன்ற ஒப்புதலுடன் மேல்நடவடிக்கை தொடரலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே, ராமசாமி நகர் பகுதியில் மாண்புமிகு கோவை கிழக்குத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 10,50,000/- (ரூபாய் பத்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வழங்கப்பட்டதில் நூலகம் கட்ட மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 6751/2010/(டி.1) கி

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 205 நாள் 05.01.2011</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 41**

பொருள்: பொதுசுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி சொக்கம்புதூர் மற்றும் ஆத்துப்பாலம் மின்மயானங்கள் பராமரித்தல் - ஒப்பந்தப்புள்ளி கோரியது - முடிவு செய்வது தொடர்பாக.

********

கோவை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள ஆத்துப்பாலம் மற்றும் சொக்கம்புதூர் மின்மயானங்கள் பராமரிப்பு செய்ய ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்படைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

இந்த ஒப்பந்தப்புள்ளிகள் 15.11.2010 அன்று திறக்கப்பட்டது. இதில் ஆத்துப்பாலம் மின் மயானத்திற்கு கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தனர். இவர்களில் திரு. மூர்த்தி என்பவர் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வில்லை. மேலும், மற்ற இரு நிறுவனங்களையும்விட மாநகராட்சிக்கு மிகக்குறைந்த வருவாய் வழங்க ஒப்புக்கொண்டுள்ளார். இதனால் இவரது ஒப்புந்தப்புள்ளி நிராகரிக்கப் பட்டது. மீதமுள்ள இரு நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித் துள்ளனர்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஆத்துப்பாலம் மின்மயானம் | |
|---|---|---|---|
| | | மாநகராட்சி பங்கு | ஒப்பந்ததாரர் பங்கு |
| 1 | தி/வா. காந்திஜி சேவா டிரஸ்ட், கோவை. | 77% | 23% |
| 2 | தி/வா.என்விரான் மெண்ட் ஹெல்த் எஜீகேசன் அன்டு டெவலப் மெண்ட் டிரஸ்ட்,மதுரை. | 70% | 30% |

சொக்கம்புத்தூர் மின் மயானத்திற்கு கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தனர். இவர்களில் திரு.எம்.ராஜ்குமார் என்பவர் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வில்லை. மேலும், மற்ற இரு நிறுவனங்களையும்விட மாநகராட்சிக்கு மிகக்குறைந்த வருவாய் வழங்க ஒப்புக்கொண்டுள்ளார். இதனால் இவரது ஒப்புந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள இரு நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளனர்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | சொக்கம்புத்தூர் மின்மயானம் | |
|---|---|---|---|
| | | மாநகராட்சி பங்கு | ஒப்பந்ததாரர் பங்கு |
| 1 | தி/வா. காந்திஜி சேவா டிரஸ்ட், கோவை. | 77% | 23% |
| 2 | தி/வா.என்விரான் மெண்ட் ஹெல்த் எஜீகேசன் அன்டு டெவலப் மெண்ட் டிரஸ்ட், மதுரை. | 70% | 30% |

இதில் மாநகராட்சிக்கு அதிக அளவு வருவாயினை ஒப்படைக்க ஒப்பந்தப்புள்ளி சமா்ப்பித்துள்ள நிறுவனமான தி/வா.காந்திஜி சேவா டிரஸ்ட், கோவை, என்ற நிறுவனத்திடம் ஆத்துப்பாலம் மற்றும் சொக்கம்புதூா் மின்மயானங்கள் பாராமரிப்பு பணியினை நிபந்தனைகளுக்குட்பட்டு 3 ஆண்டு காலத்திற்கு ஒப்படைக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்: 5693 /2006/எம்.இ.4

**மாநகர மன்ற தீா்மானம் எண் 206 நாள் 05.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 42**

பாா்வை - அரசாணை எண் 122 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்குதுறை நாள் 20.02.2008.

---------------

பாா்வையில் கண்ட அரசாணையில் மின்மயானம் எரிவாயு மயானங்களை புதியதாக குத்தகை புதுப்பிக்கும் நோ்வுகளுக்கு அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தனியாா் அறக்கட்டளைகளுக்கு பராமரிக்க அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிா்வாக இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூா் மாநகராட்சிக்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் சாலையில் மாநகராட்சியால் புதியதாக எரிவாயு மயானம் அமைக்கப்பட்டுள்ளது. அரசு ஆணையில் தெரிவித்துள்ளவாறு இம்மயானத்தை பராமரிக்கவும், மேலாண்மை செய்யவும் ஈஷா பவுண்டேஷன் நிறுவனத்தினா் 27.10.10 ம் தேதியிட்ட கடிதத்தில் கருத்துரு சமா்ப்பித்துள்ளனா்.

எனவே, இம்மயானத்தினை பராமரிப்பதற்கும், இயக்குவதற்கும் தனியாா் தொண்டு நிறுவனமான ஈஷா பவுண்டேஷன் அனுமதி வழங்க நகராட்சி நிா்வாக இயக்குநரின் உத்திரவு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 19356/09/அ1(தெ)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 207 நாள் 05.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 43**

பாா்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண் 113, நாள் 04.01.2011

------------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தியாகி குமரன் மாா்க்கெட்டின் மத்தியில் ராஜவீதி முதல் பெரிய கடைவீதி வரையில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் இருந்து வந்தது. இது தெற்கு மண்டல வருடாந்திர குத்தகை இனத்தில் 2008 – 2009 வரையில் இருந்து வந்தது.

மேலும் அந்த வாா்டின் மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் அடிப்படையில் மாமன்ற தீா்மானம் எண் 317, நாள் 24.12.08 படி மேற்படி குத்தகை இனம் நீக்கப்பட்டது.

தற்போது மேற்படி இடத்தில் நிறுத்தப்படும் இரு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. இதனால் இங்கு நிறுத்தப்படும் வாகனங்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் அந்த இடத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் அகற்றப்பட்டதால் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இங்கு இருசக்கர வாகன நிறுத்துமிடம் செயல்படுத்துவதால் அங்கு நிறுத்தப்படும் இருசக்கர வாகனங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்கிற காரணத்தாலும் இதனால் மாநகராட்சிக்கு வருமானம் கிடைக்க வாய்ப்பு உள்ள காரணத்தாலும் மேற்படி தியாகி குமரன் மாா்க்கெட் மத்தியில் இருசக்கர வாகன நிறுத்துமிடமான குத்தகை இனத்தை, மாநகராட்சியில் உள்ள இதர இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கான ஏல நிபந்தனைகளின்படி குத்தகை விடுவது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் பாா்வையில் கண்ட வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 113, நாள் 04.01.2011ல் அனுமதி அளித்துள்ளது.

எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.19356 /09 /அ1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 208 நாள் 05.01.2011**

இடத்தை நேராய்வு செய்து மீண்டும் பொருள் வைக்க ஒத்திவைக்கப்பட்டது.

---

## பொருள் எண் 44

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 112, நாள் 04.01.2011

-----------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பைபாஸ் ரோட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மீன் மார்க்கெட்டில் 64 மீன், கருவாடு மற்றும் ஆட்டிறைச்சி கடைகளுக்கு 29.12.2010 அன்று மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இதில் கீழ் குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச மாத வாடகை கோரப்பட்டுள்ளது.

### 1. மீன் கடைகள்

| கடை எண் | ஏலதாரர் பெயர் | உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை (ரூ) | மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1. | சிவபாலன் | 10,350 | மின் ஏலம் |
| 2. | K.M. சத்தார் | 4,800 | ஒப்பந்தப்புள்ளி |
| 3. | P.S. உசேன் | 3,300 | ஒப்பந்தப்புள்ளி |
| 4. | அப்துல் கரீம் | 6,000 | ஒப்பந்தப்புள்ளி |
| 5. | M.A. ஹமீது | 3,300 | ஒப்பந்தப்புள்ளி |
| 6. | M.H. அப்பாஸ் | 3,300 | ஒப்பந்தப்புள்ளி |
| 7. | கபீர் | 3,900 | ஒப்பந்தப்புள்ளி |
| 8. | ஹனீபா | 3,200 | ஒப்பந்தப்புள்ளி |
| 9. | J. சதக்கத்துல்லா | 3,300 | ஒப்பந்தப்புள்ளி |
| 10. | J. இஸ்மாயில் | 3,500 | ஒப்பந்தப்புள்ளி |
| 11. | சிவபாலன் | 10,500 | மின் ஏலம் |
| 12. | K. சித்திக் | 4,400 | ஒப்பந்தப்புள்ளி |
| 13. | S. நபீக் | 4,200 | ஒப்பந்தப்புள்ளி |
| 14. | S.A. காஜா | 4,500 | ஒப்பந்தப்புள்ளி |
| 15. | இம்தியாஸ் | 4,300 | ஒப்பந்தப்புள்ளி |
| 16. | சுபைர் | 4,000 | ஒப்பந்தப்புள்ளி |
| 17. | ஃபெரோஸ்கான் | 3,500 | ஒப்பந்தப்புள்ளி |
| 18. | சா்புதீன் | 3,300 | ஒப்பந்தப்புள்ளி |
| 19. | சிராஜீதீன் | 3,100 | ஒப்பந்தப்புள்ளி |
| 20. | சிவராஜ் | 4,275 | ஒப்பந்தப்புள்ளி |
| 32. | கமலா | 3,300 | ஒப்பந்தப்புள்ளி |
| 33. | பானுமதி | 3,300 | ஒப்பந்தப்புள்ளி |
| 34. | மணிவண்ணன் | 4,600 | ஒப்பந்தப்புள்ளி |
| 35. | ராமமூர்த்தி | 4,000 | மின் ஏலம் |
| 36. | நாகராஜ் | 3,100 | ஒப்பந்தப்புள்ளி |
| 37. | பிரியா | 3,100 | ஒப்பந்தப்புள்ளி |
| 40. | ராமசந்திரன் | 3,000 | ஒப்பந்தப்புள்ளி |
| 41. | ராஜேந்திரன் | 3,000 | ஒப்பந்தப்புள்ளி |
| 42. | நசீர் | 3,100 | ஒப்பந்தப்புள்ளி |
| 43. | கணேசன் | 4,000 | மின் ஏலம் |
| 44. | அரிச்சந்திரன் | 4,000 | மின் ஏலம் |
| 45. | சிவக்குமார் | 3,100 | ஒப்பந்தப்புள்ளி |
| 46. | A. அப்பாஸ் | 3,100 | ஒப்பந்தப்புள்ளி |
| 47. | குருவம்மாள் | 6,510 | மின் ஏலம் |
| 48. | K. அபுதாகீர் | 4,500 | ஒப்பந்தப்புள்ளி |
| 62. | V.A. அப்பாஸ் | 5,300 | ஒப்பந்தப்புள்ளி |
| 63. | உமையது | 3,500 | மின் ஏலம் |
| 64. | H.S. உமர் | 3,100 | ஒப்பந்தப்புள்ளி |
| 65. | M. அப்பாஸ் | 3,100 | ஒப்பந்தப்புள்ளி |
| 66. | S. ஹரீஷ் | 3,250 | ஒப்பந்தப்புள்ளி |
| 67. | M. அப்பாஸ் | 3,050 | ஒப்பந்தப்புள்ளி |
| 68. | சாகுல்ஹமீது | 3,100 | ஒப்பந்தப்புள்ளி |

மேற்படி கடைகளுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பைவிட கூடுதல் தொகை மாதவாடகையாக கோரப்பட்டுள்ளது. இதில் 42 மீன் கடைகளில் ரூ.3000 முதல் ரூ.3500 வரை 24 கடைகளுக்கும (கடை எண்கள் 3, 5, 6, 8, 9, 10, 17, 18, 19, 32, 33, 36, 37, 40, 41, 42, 45, 46, 63, 64, 65, 66, 67, 68) ரூ.3500 முதல் 4000 வரை 3 கடைகளுக்கும் (கடை எண்கள் 7, 43, 44) மற்ற இதர கடைகளுக்கு ரூ.4000க்கு மேல் ஏலக் கோரிக்கை கோரப்பட்டுள்ளது. மேலும் மீன் கடைகளில் 32, 33, 34, 35, 36 , 37 , 40 41, 42, 43, 44, 45, 47, 48, 64, 66 ஆகிய 16 கடைகளுக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி ( Single Tender ) பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள கடைகளுக்கு 1க்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. மேலும், கடை எண்கள் 38 மற்றும் 39க்கு யாரும் பங்கேற்கவில்லை.

மேலும் கடை எண் 1 – மீன்கடைக்கு திரு. சிவபாலன் என்பவர் கோரிய உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.10350 விட 5 சதவீதம் கூடுதலாக ஏலம் கோர விரும்புவதாகவும், மறு ஏலம் கொண்டுவரத் தெரிவித்து திரு. எஸ். அப்துல்காதர் என்பவர் ஏல நிபந்தனைப்படி உரிய தொகை செலுத்தியுள்ளார். எனவே கடை எண் 1க்கு மறுஏலம் கோரலாம். இத்துடன் ஏலம் கோரப்படாத கடை எண்கள் 38 மற்றும் 39 ஆகிய கடைகளுக்கு மறு ஏலம் கோரலாம்.

## 2. மட்டன் கடைகள்

| கடை எண் | ஏலதாரர் பெயர் | உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை (ரூ) | மின்ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 21. | சிக்கந்தர் | 13,532 | ஒப்பந்தப்புள்ளி |
| 22. | K. நடராஜ் | 5,615 | மின் ஏலம் |
| 23. | கருப்பத்தாள் | 5,600 | மின் ஏலம் |
| 25. | கிருஷ்ணாஜிராவ் | 4,500 | மின் ஏலம் |
| 26. | ஹபீப் ரஹ்மான் | 5,380 | ஒப்பந்தப்புள்ளி |
| 27. | K. ஆனந்தராவ் | 4,510 | ஒப்பந்தப்புள்ளி |
| 28. | M.K.S. செந்தில்குமார் | 5,050 | மின் ஏலம் |
| 29. | M.K.S. செந்தில் குமார் | 5,100 | மின் ஏலம் |
| 30. | T.S. முகம்மது இசாக் | 6,500 | ஒப்பந்தப்புள்ளி |

மேலும் மட்டன் கடைகளில் கடை எண் 23, 25, 27 ஆகிய 3 கடைகளுக்கும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி ( Single Tender ) பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள கடைகளுக்கு 1க்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. அனைத்து கடைகளுக்கும் மாதவாடகையாக ரூ.4000க்கு மேல் கோரப்பட்டுள்ளது. இதில் ஏலம் கோரப்படாத கடை எண் 24க்கு மறு ஏலம் கோரலாம்.

## 3. கருவாட்டுக் கடைகள்

| கடை எண் | ஏலதாரர் பெயர் | உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை (ரூ) | மின்ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 49. | பசீத் | 10,000 | மின் ஏலம் |
| 50. | M.M. பசீர் அஹமத் | 6,000 | ஒப்பந்தப்புள்ளி |
| 51. | S.K. வசந்த் | 5,100 | ஒப்பந்தப்புள்ளி |
| 52. | செல்வி | 4,500 | ஒப்பந்தப்புள்ளி |
| 53. | T. ராஜா | 5,500 | ஒப்பந்தப்புள்ளி |
| 55. | N.R. முருகன் | 6,300 | ஒப்பந்தப்புள்ளி |
| 57. | H. ஹைதர்அலி | 5,100 | ஒப்பந்தப்புள்ளி |
| 58. | அபுதாகீர் | 5,000 | ஒப்பந்தப்புள்ளி |

கடை எண் 51க்கு ஓரே ஓப்பந்தப்புள்ளி (Single Tender) பெறப்பட்டுள்ளது.மீதமுள்ள அனைத்து கடைகளுக்கும் மாதவாடகையாக ரூ.4000க்கு மேல் கோரப்பட்டுள்ளது. இதில் ஏலம் கோரப்பாட கடை எண்கள் 54 மற்றும் 56க்கு மறு ஏலம் கோரலாம்.

எனவே மேற்படி உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ள கடைகளை ஒப்படை செய்வது குறித்தும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டிருப்பினும் உயர்ந்த பட்ச ஏலத் தொகை பெறப்பட்டுள்ள மேற்படி கடைகளை ஒப்படை செய்வது குறித்து முடிவு செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைத்ததில் பார்வையில் கண்ட வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 112, நாள் 04.01.2011ல் கீழ்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

1) அட்டவணை 1ல் உள்ள கடைகளில் ரூ.4000/- மற்றும் அதற்கு மேலும் உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ள கடைகளை ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. பிற கடைகளுக்கு மறு ஏலம் கோர பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2) அட்டவணை 2 மற்றும் 3ல் உள்ள கடைகளுக்கு உயா்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது.
3) அட்டவணை -1ல் கடை எண்கள் 1, 38, 39, அட்டவணை -2ல் கடை எண் 24, அட்டவணை -3ல், கடை எண் 54 மற்றும் 56க்கு மறு ஏலம் கோர தீா்மானிக்கப்பட்டது.

எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் ஒப்புதலுக்காக சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 4006 /10 /அ1(தெ)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 209 நாள் 05.01.2011**

1. பொருளில் அட்டவணை 1-ல் உள்ள ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ள 42 கடைகளில், 17 கடைகளுக்கு ரூ.4000/- மற்றும் அதற்கு மேலும் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. 25 கடைகளுக்க ரூ. 4000/-க்கு கீழ் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. 16 கடைகளுக்கு ஒரேஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டுள்ளது. உயா்ந்தபட்சமாக ரூ. 10,500/- வரை கடை எண் 11ற்கு ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டுள்ளது. மீன் மாா்க்கெட்டில் உள்ள கடைகளில் ரூ. 4000/-க்கும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ள கடைகளுக்கு மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தினால் கூடுதலாக தொகை கிடைக்க வாய்ப்பு உள்ளது. மாநகராட்சியின் வருவாய் கூடுதலாக கிடைக்க வாய்ப்புகள் உள்ள காரணத்தினாலும், இரண்டாவது முறையாக ஏலம் நடத்தப்பட்டுள்ளதாலும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 112 நாள் 04.01.2011ன் பரிந்துரையின்படியும், ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றாலும் அட்டவணை 1ல் உள்ள மீன் கடைகளில் கடை எண்கள் 2, 4, 11, 12, 13, 14, 15, 16, 20, 34, 35, 43, 44, 47, 48, 62 ஆகிய 16 கடைகளின் உயா்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று ஒப்படை செய்ய தீா்மானிக்கப்பட்டது.

2. பொருளில் அட்டவணை 2 மற்றும் அட்டவணை 3-ல் உள்ள கடைகள் அனைத்திற்கும் ரூ. 4000/-க்கும் மேல் உயா்ந்தபட்ச ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளதாலும், இரண்டாவது முறையாக ஏலம் நடத்தப்பட்டுள்ளதாலும், ஒரேஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டாலும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின்படியும், மட்டன் கடைகள் கடை எண்கள் 21, 22, 23, 25, 26, 27, 28, 29, 30 மற்றும் கருவாட்டுக் கடைகள் கடை எண்கள் 49, 50, 51, 52, 53, 55, 57, 58 ஆகிய 8 கடைகளின் உயா்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று ஒப்படை செய்ய தீா்மானிக்கப்பட்டது.

3. பொருளில் அட்டவணை 1-ல் கடை எண் 1ற்கு மறுஏலம் கோரி 5% கூடுதல் தொகை செலுத்த முன்வந்துள்ளதால் மறுஏலம் கோர அனுமதிக்க தீா்மானிக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத கடை எண்கள் 38, 39 மற்றும் ரூ. 4000/-க்கு கீழ் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ள டை எண்கள் 3, 5, 6, 7, 8, 9, 10, 17, 18, 19, 32, 33, 36, 37, 40, 41, 42, 45, 46, 63, 64, 65, 66, 67, 68 ஆகிய கடைகளுக்கும் மறுஏலம் கோரி அனுமதிக்க தீா்மானிக்கப்பட்டது.

4. பொருளில் அட்டவணை 2 மட்டன் கடைகள் கடை எண் 24 மற்றும் அட்டவணை 3 கருவாட்டுக்கடைகள் கடை எண் 54 மற்றும் 56 ஆகிய கடைகளுக்கு மறுஏலம் கோர அனுமதிக்க தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 45

பொருள் :- வருவாய் – கோயம்புத்தூா் மாநகராட்சி – வரிசெலுத்துவோா் வங்கிகளின் இணைய தள வசதி மூலம் மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய வரியினங்கள் செலுத்துதல் மற்றும் மின்– ஆளுமை சேவை பயன்பாடு மேம்படுத்துதல் – சாா்பு.

******

கோயம்புத்தூா் மாநகராட்சியில் தற்போது கிரிடிட் காா்டு மூலம் வரி செலுத்தும் வசதி ICICI வங்கி மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**04.01.11** அன்று நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்டத்தில் அம்பத்தூா் மாநகராட்சியில் வரிவிதிப்புதாரா்கள் வங்கிகளில் இணையதள வசதிகள் மூலம் வரி செலுத்தி வருவதாகவும், இத்திட்டத்தினை இம்மாநகராட்சியில் அமல்படுத்த மாமன்றத்தின் அனுமதி பெறலாம் என முடிவு எடுக்கப்பட்டது.

இவ்வசதியினை இம்மாநகராட்சியில் செயல்படுத்தினால் வரி செலுத்துவோா் தங்களுக்கான வரியினங்களை பல்வேறு வங்கிகளில் கிரிடிட் காா்டு, டெபிட் காா்டு போன்ற காா்டுகள் மூலமாகவும் அவா்களது வங்கி கணக்கிலிருந்து நேரடியாக RTGS / NEFT (Real Time Gross Settlement – உடனடி பணம் பரிமாற்றம் / National Electronic Funds Transfer - தேசிய மின்னனு பணமாற்றம்) போன்ற வசதிகள் மூலம் செலுத்தவும் இயலும். இவ்வசதியினை பயன்படுத்தும் பொதுமக்கள் வரிசெலுத்தும் பொழுது இதற்கான சேவைக்கட்டணத்தை இவ்வசதியினை ஏற்படுத்தி தரும் நிறுவனத்திற்கு வழங்க வேண்டும்.

வரி செலுத்துவதில் வசதிகள் குறித்து பல்வேறு சேவை நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் போன்றவர்களுடன் கலந்தாலோசனை செய்து விபரம் பெறப்பட்டதில் ஒவ்வொரு சேவை நிறுவனமும் சேவை வகையில் வேறுபடுகின்றனர்.

மேலும் சேவைக் கட்டணத்திலும் வித்தியாசம் உள்ளது. எனவே கோயம்புத்தூர் மாநகர மக்களுக்கு தற்போது கீழ்க்கண்ட வசதிகளை குறைந்த சேவை கட்டணத்தில் வழங்க முன்வரும் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரலாம்.

1. **Credit Card, 2. Debit Card, 3. American Express Card, 4. Diners Credit Card, 5. Cash Card Transaction, Net Banking Transaction, 7. Electronic Clearing Service, 8. RTGS (Real Time Gross Settlement,) 9. NEFT (National Electronic Funds Transfer), 10. Electronic Bill and Presentment Payment Services (EBPP), 11. Auto Pay.**

மேற்கண்ட வசதிகளை வரி செலுத்த வசதியாக மக்களுக்கு வழங்க மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கலாம்.

எனவே மேற்படி பணியை நிறுவனங்கள் மூலம் செயல்படுத்த இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடைமுறைப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். ந.க. எண் : **63/ 2011/ WS 6**

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 210 நாள் 05.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 46

பொருள்:- குத்தகை - கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் மேட்டுப்பாளையம் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் உள்ள உரிம இனங்கள் - பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படை செய்தல் - அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் புதிதாக பேருந்து நிலையம் கட்டப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. இதில் கட்டண கழிப்பிடம் மற்றும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்தல் மற்றும் முதல் தளத்தில் உள்ள இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்தல் ஆகியவை துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

எனவே, புதிய நவீன பேருந்து நிலையத்தில் உள்ள கீழ்க்கண்ட உரிம இனங்களை பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யலாம்.

உரிம இனங்கள் (ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு)

1. பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துக்களுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

2. பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் உள்ள இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்தல் உரிமம்.

3. பொருட்கள் பாதுகாப்பு அறை மற்றும் குளிரூட்டப்பட்ட பயணியர் ஓய்வு அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

4. பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடங்களில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

5. பேருந்து நிலையத்தில் உள்ள உணவகம் நடத்தும் உரிமம்.

6. பேருந்து நிலையம் - தரைதளத்தில் 1750 சதுரடி அளவுள்ள அலுவலக உபயோக கட்டமைப்பு.

7. பேருந்து நிலையம் முதல் தளத்தில் 8050 சதுரடி அளவுள்ள அலுவலக கட்டமைப்பு.

8. பேருந்து நிலையம் இரண்டாம் தளத்தில் 8800 சதுரடி அளவுள்ள அலுவலக கட்டிடம்.

மேற்படி இனங்களில் வரிசை எண். 1 முதல் 4 வரை உள்ள இனங்களை வருடாந்திர குத்தகை அடிப்படையிலும், வரிசை எண் 5 முதல் 8 வரை உள்ள இனங்களை மாதாந்திர உரிம கட்டணம் அடிப்படையிலும் பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யலாம்.

எனவே, மேற்படி இனங்களை பொது மின் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி இனங்களுக்குண்டான வைப்புத் தொகை, காப்புத் தொகை, வங்கி உறுதி சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும், பொது மின் ஏலம்/ மறு மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்குண்டான செலவினங்களை ஏற்கவும். பேருந்து நிலைய பொது ஏல நிபந்தனை மற்றும் சிறப்பு நிபந்தனைகளை அங்கீகரிக்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 10070/10/அ1(மே)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 211 நாள் 05.01.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 114 நாள் 4.1.11 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 47

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகள் , பூ வியாபார அறை, கட்டண கழிப்பிடம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகிய இனங்களுக்கு 30.12.2010 அன்று பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. உச்சக் கேள்வி தாரர்களுக்கு கடைகள் ஒப்படைதல் மற்றும் மறு பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி - கோருதல் - தொடர்பாக.

பார்வை :- மாமன்ற தீர்மான எண். 123, நாள் 29.10.2010.
வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 106, நாள்: 4.1.2011

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - ரங்கே கவுடர் வீதி நவீன வணிகவளாக கடைகள் , பூ வியாபார அறை, கட்டண கழிப்பிடம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகிய இனங்களுக்கு 30.12.2010 அன்று பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இதில் கீழ்க்குறிப்பிட்ட கடைகளுக்கு குறிப்பிட்டுள்ள உயர்ந்தபட்ச மாத உரிமம் தொகை கோரப்பட்டுள்ளது.

அ. (1) பூ வியாபார அறை ( மாதாந்திர அடிப்படையில்)

| வ.எண். | ஏலதாரர் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர உரிம மதிப்பு | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி தொகை | | உயர்நதப்பட்ச ஏலம்/ ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | எம். ஜெகதீசன் | 25000 | ----- | 22,500 | |
| 2 | எஸ். செல்வ குமார் | 25000 | ----- | 30,300 | 30,300 |

அ(2) . கட்டண கழிப்பிடம் மற்றும் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வருடாந்திர அடிப்படையில்)

| வ.எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்தி உரிம மதிப்பு | வருடாந்திர அடிப்படையில் | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | எஸ். செல்வகுமார் | 500000 | ---- | 11,10,000 | 11,10,000 |
| 2 | எஸ்.ராஜமாணிக்கம். | 500000 | ---- | 8,55,000 | |
| 3 | எம். செல்வம் | 500000 | 6,61,000 | | |
| 4 | பி.ஏ.உசேன் | 500000 | ---- | 5,10,000 | |

அ (3). பிளாக் I மற்றும் பிளாக் II கடைகள்

| வ.எண். | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாத உரிம மதிப்பு | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி தொடர்பாக | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | 2 | ஏ.ஆர். முகமது யூனிஸ். | 5000 | ---- | 7,500 | 7500 |
| | 2 | எம்.ஜி அன்வர் பாஷா | 5000 | 6,300 | ----- | |
| 2 | 3 | எம்.ஜி அன்வர் பாஷா | 5000 | 6,300 | ----- | |
| | 3 | எஸ். காஜா மொய்தீன் | 5000 | ---- | 7,500 | 7,500 |
| 3 | 8 | எம்.ராஜ்குமார் | 5000 | 5,200 | ----- | |
| | 8 | வள்ளியம்மாள் | 5000 | ----- | 7,500 | 7,500 |
| 4 | 10 | கே. தியாகராஜன் | 5000 | 5,100 | ----- | |
| | 10 | எம். உஸ்மான் | 5000 | ---- | 6,000 | 6,000 |
| 5 | 15 | கே.கே.அய்யப்பன் | 5000 | ---- | 7,500 | 7,500 |
| | 15 | எம்.அருண்சங்கர் | 5000 | ---- | 4,800 | |
| 6 | 16 | எம்.கே.நௌஷத் | 5000 | ---- | 5,400 | |
| | 16 | கே.கார்த்திகேயன் | 5000 | ---- | 7,500 | 7,500 |
| 7 | 17 | ஏ.எம்.நாசர் அலி | 5000 | ---- | 5,400 | |
| | 17 | ஏ.என்.சக்திவேல் | 5000 | ---- | 7,500 | 7,500 |
| 8 | 24 | எஸ். ஷாஜகான் | 2,500 | ----- | 4,000 | 4,000 |
| | 24 | எம்.பி.மொய்தீன் | 2,500 | ----- | 2,800 | |
| 9 | 25 | டி.ரவீசந்திரன் | 2,500 | ----- | 2,400 | |
| | 25 | கே.கார்த்திகேயன் | 2,500 | ----- | 3,750 | 3,750 |
| 10 | 26 | டி.ரவீசந்திரன் | 2,500 | ----- | 2,300 | |
| | 26 | எஸ்.விஜயகுமார் | 2,500 | ----- | 3,500 | 3,500 |
| 11 | 27 | எம்.எஸ்.அமானுல்லா | 2,500 | ----- | 6,300 | 6,300 |
| | 27 | எச்.அனீஸ் | 2,500 | ----- | 2,100 | |
| | 27 | எஸ். காஜா மொய்தீன் | 2,500 | ----- | 4,000 | |
| 12 | 28 | எஸ்.எம்.சுந்தர்ராஜன் | 2,500 | ----- | 15,100 | |
| | 28 | எம்.செல்வம் | 2,500 | 21,000 | | 21,000 |
| | 28 | கே.கே.அய்யப்பன் | 2,500 | ----- | 10,000 | |
| | 28 | எச்.அனீஸ் | 2,500 | ----- | 3,000 | |
| | 28 | கே.ஏ.அபுதாஹீர் | 2,500 | ----- | 6,300 | |
| | 28 | எம்.கே.நௌஷத் | 2,500 | ----- | 6,300 | |
| 13 | 30 | ஏ.சலாவுதீன் | 2,500 | 10,800 | | 10,800 |
| | 30 | எம்.ஜெகதீசன் | 2,500 | ----- | 10,000 | |
| 14 | 33 | ஏ.எம்.முஸ்தபா | 2,500 | ----- | 2,400 | |
| | 33 | ஏ.அன்சாரி | 2,500 | ----- | 4,000 | 4,000 |
| 15 | 34 | ஏ.என். சக்திவேல் | 2,500 | ----- | 2,500 | |
| | 34 | ஏ.எம்.முஸ்தபா | 2,500 | ----- | 3,750 | 3,750 |
| 16 | 35 | ஜி. சிராஜ்தீன் | 2,500 | ----- | 2,400 | |
| | 35 | எம்.மாணிக்கம் | 2,500 | ----- | 3,500 | 3,500 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | 36 | ஜி. சிராஜ்தீன் | 2,500 | ----- | 2,500 | |
| | 36 | எம். முகமது சலீம் | 2,500 | ----- | 3,750 | 3,750 |
| 18 | 45 | பி.எல்.முத்துராமன் | 2,500 | ----- | 4,000 | |
| | 45 | எஸ்.முபாரக் | 2,500 | ----- | 5,400 | 5,400 |

அ(1), அ(2) மற்றும் அ(3) இனங்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பைக் காட்டிலும் உயர்ந்தபட்ச ஏல கேள்வி தொகை பெறப்பட்டுள்ளதால் மேற்படி இனங்களை சம்பந்தப்பட்ட ஏலதாரர்களுக்கு ஒப்படை செய்யலாம்.

ஆ. பிளாக் I மற்றும் பிளாக் II கடைகள் (ஒரு நபர் மட்டும் கலந்து கொண்டவர்கள்)

| வ.எண். | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாத உரிம மதிப்பு | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | 4 | ஏ.வெங்கடேஷ் | 5000 | ---- | 6,000 | 6,000 |
| 2 | 6 | ஏ.அன்சாரி | 5000 | ---- | 7,500 | 7,500 |
| 3 | 7 | எம். முகமது சலீம் | 5000 | ---- | 6,000 | 6,000 |
| 4 | 11 | எஸ். காஜா உசேன் | 5000 | ---- | 6,000 | 6,000 |
| 5 | 12 | எம். மாணிக்கம் | 5000 | ---- | 5,750 | 5,750 |
| 6 | 13 | எஸ்.விஜய குமார் | 5000 | ---- | 5,750 | 5,750 |
| 7 | 14 | எஸ். செல்வகுமார் | 5000 | ---- | 7,500 | 7,500 |
| 8 | 20 | ஐ.ஹரூன் ரசீத் | 3000 | ---- | 3,750 | 3,750 |
| 9 | 21 | ஐ.ஹரூன் ரசீத் | 3000 | ---- | 3,750 | 3,750 |
| 10 | 22 | எம். அருண்சங்கர் | 2500 | ---- | 3,500 | 3,500 |
| 11 | 23 | எம்.ஜெகதீசன் | 4000 | ---- | 3,500 | 3,500 |
| 12 | 37 | வள்ளியம்மாள் | 2500 | ---- | 3,500 | 3,500 |
| 13 | 38 | எஸ்.முகமது சலீம் | 2500 | ---- | 3,500 | 3,500 |
| 14 | 39 | எஸ்.முகமது சலீம் | 2500 | ---- | 3,500 | 3,500 |
| 15 | 40 | ஒய். முபாராக் அலி | 2500 | ---- | 3,000 | 3,000 |
| 16 | 41 | ஏ.எஸ்.ஹக்கீம் | 2500 | ---- | 3,500 | 3,500 |
| 17 | 42 | ஏ.ஆர். முகமது யூனிஸ் | 2500 | ---- | 3,000 | 3,000 |
| 18 | 43 | எஸ்.காஜா உசேன் | 2500 | ---- | 3,000 | 3,000 |
| 19 | 44 | ஒய். முபாராக் அலி | 2500 | ---- | 3,000 | 3,000 |

ஆ. கடை எண். 4,6,7,11,12,13,14,20,21,22,23,37 முதல் 44 முடிய ஆகிய 19 கடைகள் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட அரசு மதிப்பை காட்டிலும் ஒரு நபரே உயர்ந்தபட்ச கேள்வி தொகை கோரப்பட்டிருந்தால் மேற்படி கடைகளை ஏலதாராகளுக்கு ஒப்படைப்பு செய்வது குறித்து வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுக் முடிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின்படி ( தீர்மான எண். 114, நாள் 4.11.2011) மேற்படி கடைகளுக்கு மறு ஏலத்திற்கு கொண்டுவரலாம் என தீர்மானிக்கப்பட்டது.

இ .பிளாக் I மற்றும் பிளாக் II கடைகள் (மறு ஏலம் கோரப்பட்டுள்ள கடைகள்)

| வ.எண். | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாத உரிம மதிப்பு | மாதாந்திர உரிம உச்ச கேள்வி | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | 1 | ஏ.அபுதாஹீர் | 5000 | 19,000 | ---- | |
| | 1 | எஸ்.ராஜமாணிக்கம் | 5000 | ---- | 25,113 | 25,113 |
| | 1 | எம்.பி.மொய்தீன் | 5000 | ---- | 15,001 | |
| | 1 | எஸ்.அண்ணபூரணி | 5000 | ---- | 15,300 | |
| | 1 | பி.பாலகிருஷ்ணன் | 5000 | ---- | 6,150 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | எஸ். ஷாஜாகான் | 5000 | ---- | 7,500 | |
| | 5 | ஆர். நாராயணன் | 5000 | ---- | 11,300 | 11,300 |
| 3 | 9 | எம். ராஜ்குமார் | 5000 | 5,900 | | |
| | 9 | எச். ஜாபர் அலி | 5000 | ---- | 7,500 | 7,500 |
| 4 | 18 | எம்.எஸ். அமானுல்லா | 5000 | ---- | 6,300 | |
| | 18 | டி.புஸ்பவள்ளி | 5000 | 10,000 | ---- | --- |
| | 18 | பி.எல்.முத்துராமன் | 5000 | ---- | 15,000 | |
| | 18 | பி.பாலகிருஷ்ணன் | 5000 | ---- | 6,150 | |
| | 18 | எஸ். .கந்தவேல் | 5000 | ---- | 15,500 | 15,500 |
| 5 | 19 | டி.வடிவேல் | 4000 | 9,100 | | 9,100 |
| | 19 | எஸ்.முபாரக் | 4000 | ----- | 5,400 | |
| | 19 | ஏ.எஸ்.ஹக்கீம் | 4000 | ----- | 5,100 | |
| 6 | 29 | எம்.உஸ்மான் | 2500 | 20,000 | | 20,000 |
| | 29 | கே.ஏ.அபுதாஹீர் | 2500 | ---- | 6,210 | |
| | 29 | ஆர். சின்னதுரை | 2500 | ---- | 15,500 | |
| | 29 | ஆர்.எம்.வேலுமணி | 2500 | ---- | 5,500 | |
| | 29 | ஏம். நாசர் அலி | 2500 | ---- | 6,300 | |
| 7 | 31 | எஸ்.ராஜா | 2500 | 18,125 | | 18,125 |
| | 31 | ஏ.சலாவுதீன் | 2500 | ---- | 5,400 | |
| | 31 | சி.எம்.தனபாலன் | 2500 | ---- | 15,300 | |
| | 31 | டி.பூபதி | 2500 | ---- | 6,500 | |
| | 31 | ஜெமிலா பேகம் | 2500 | ---- | 6,100 | |
| | 31 | ஏ.வெங்கடேஷ் | 2500 | ---- | 12,000 | |
| 8 | 32 | எச். ஜாபர் அலி | 2,500 | 20,000 | | 20,000 |
| | 32 | ஆர். சின்ன துரை | 2,500 | ---- | 16,000 | |
| | 32 | ஜெமிலா பேகம் | 2,500 | ---- | 6,300 | |
| | 32 | டி.பூபதி | 2,500 | ---- | 4,800 | |

இ. கடை எண். 1, 5, 9 , 18, 19, 29, 31, 32, ஆகிய 8 கடைகளுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பைக்காட்டிலும் உயர்ந்தபட்ச கேள்வி தொகை பெறப்பட்டிருப்பினும் மேற்கண்ட கடைகளுக்கு ஏலதாரர்களிடமிருந்து மறு ஏலம் கோரி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளதால் மறுஏலத்திற்கு கொண்டுவரலாம்.

மேற்படி இனங்களுக்கு வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின்படி மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அ . (1), (2), (3) இனங்கள் ஏலதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

ஆ. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 106 நாள்: 4.1.2011ன்படி 19 கடைகளுக்கு மறு ஏலத்திற்கு கொண்டுவரலாம்.

இ. கடைகளை மறு ஏலத்திற்கு கொண்டுவரலாம்.

ந.க.எண்.9451/2009/அ1(மே)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 212 நாள் 05.01.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 106 நாள் 4.1.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஆ, ஆ, இ, அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 48**

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - வீதிகளில் சேகரமாகும் குப்பைகள் அகற்றும் பணிக்கு தனியார் லாரிகள் ஈடுபடுத்துதல் -புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல் - தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் உள்ள வீதிகளில் சேகரமாகும் குப்பைகள் அகற்றும் பொருட்டு மாநகராட்சி லாரிகளுடன் தனியார் லாரிகளும் ஈடுபடுத்தப்பட்டு வந்தது. இப்பணி தி/வா.ஸ்ரீராஜகணபதி டிரேடர்ஸ் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிறுவனத்திற்கு இவ்வுத்திரவு 6 ஆண்டுகளாக நீட்டிப்பு செய்யப்பட்டு வந்தது.

எனவே, 2011 ஆம் ஆண்டிற்கு இப்பணியினை மேற்கொள்ள தேவைக்கேற்ப வாகனங்களை பயன்படுத்த புதிய ஒப்பந்தப் புள்ளிகள் கோர மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண் : 64/ 2011/ எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 213 நாள் 05.01.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 49**

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - வீதிகளில் சேகரமாகும் குப்பைகள் அகற்றும் பணிக்கு தனியார் டிராக்டர்களை ஈடுபடுத்துதல் -புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல் - தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் உள்ள வீதிகளில் சேகரமாகும் குப்பைகள் அகற்றும் பொருட்டு மாநகராட்சி லாரிகளுடன் தனியார் டிராக்டர்களும் ஈடுபடுத்தப்பட்டு வந்தது. இப்பணி தி/வா.சப்தகிரி டிரேடர்ஸ், மேட்டூர்டேம் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிறுவனத்திற்கு இவ்வுத்திரவு 6 ஆண்டுகளாக நீட்டிப்பு செய்யப்பட்டு வந்தது.

எனவே, 2011 ஆம் ஆண்டிற்கு இப்பணியினை மேற்கொள்ள தேவைக்கேற்ப வாகனங்களை பயன்படுத்த புதிய ஒப்பந்தப் புள்ளிகள் கோர மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம். ந.க. எண் : 65/ 2011/ எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 214 நாள் 05.01.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

சிறப்புத் தீர்மானம் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகம் பல்வேறு அம்சங்கள் நிறைந்த நவீன தகவல் மையம் (Information Centre/Unified communication system for CCMC) அமைக்க பூர்வாங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதனை விரைவாக ஆரம்பித்து வைக்க இந்த பொருளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் சிறப்புத் தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**<u>சிறப்பு தீர்மானம் 1 நாள். 05.01.2011</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் 2

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெரும்பங்கு வகித்த தமிழக தலைவர்கள் பலர் உள்ளனர். அவர்களில் முக்கிய தலைவராக திகழ்ந்தவர் பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர்கள் அவர்கள் ஆவார்கள்.

இவர் ஒரே நேரத்தில் சட்டமன்றம், பாராளுமன்றம் என இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டுள்ளார். தொகுதிக்குச் சென்று ஒருவரிடமும் வாக்கு கேட்காமலே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர். நாட்டு விடுலைக்காக போராட்டங்களில் கலந்துகொண்டு, வாழ்நாளில் பெரும் பகுதியை சிறைத்தண்டனை பெற்று தியாகம் செய்தவர். ஆங்கில அரசால் இந்தியாவில் வடநாட்டில் பாலகங்காதர திலகருக்கும், தென் இந்தியாவில் பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவருக்கு மட்டும்தான் வாய்ப்பூட்டு சட்டம் போடப்பட்டது என்பது வரலாறு. தனக்குச் சொந்தமான சுமார் 5500 ஏக்கர் நிலங்களையும் ஏழைகளுக்கு இலவசமாக எழுதி வைத்த மாமனிதன்.

இன்னும் பல்வேறு சிறப்புகளை உடைய பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு கோவை மாநகராட்சி 24-வது வார்டு மாகாளியம்மன் கோயில் முன்புறம் உள்ள திடலில் அந்த வார்டைச் சேர்ந்த தேவர் சமூக கல்வி வளர்ச்சி அறக்கட்டளை சார்பாக அவர்களது சொந்த செலவில் வெண்கலச் சிலையினை வைத்து, அவர்களே பராமரிப்பு, பாதுகாப்பினை மேற்கொள்ளவும் இம்மாமன்றத்தில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றிட வேண்டுமாய் மாமன்ற அனைத்துகட்சித் தலைவர்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

<u>சிறப்பு தீர்மானம் 2 நாள். 05.01.2011</u>

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி